# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை


6 32




மாண்புமிகு சத்தியவாணிமுத்து அம்மையாரின் 47-வது பிறந்தநாள் விழாவில் முதலமைச்சரும், கல்வி அமைச்சரும்.

—நன்றி: 'தினத்தந்தி'


22-2-70

விலை 20 காசு



# கட்டி முடிக்கப்பட்ட கோபுரம்

—கச்சியப்பன்—

**1969**—ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நான்காம் நாள் பகல் 11–30 மணிக்குச் சென்னைக் கடற்கரையில். கடற்கரை மணல் தெரியாமல் பெருங்கூட்டம் சோகம் கப்பிய நிலையில் கூடிக் கிடந்தது. ஆற்றாது அழுது அரற்றிக் கொண்டிருந்தவர்களின் துயரத்தை அதிகப்படுத்தும் வகையில் போர் மறவர்களின் பீரங்கிகள் முழங்கின. தமிழ் மண்ணின் விடுதலைக்குப் புதுப்பாதை காட்டிய பேரறிஞர் அண்ணாவை மண்ணுக்குள் அடக்கம் செய்துவிட்டார்கள்!

அவர் இருந்த நாளில், 'என் இருதயம் பெரிது–பெரிது' என்று அவர் சொன்ன நாளில் அதன் அளவைப் புரியாதவர்கள், அன்றைக்குச் சென்னை நகரை ஈமக்கடன் கழிக்கும் ஒரு பெருநகராய் ஆக்கிவிட்டு அவர் சென்ற பிறகுதான், புரிந்துகொண்டார்கள்.

காலத்தை நம்பிக் காலத்தின் கனிவுக்காக காத்திருந்து பழக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் 'காலம் ஆகி' மண்ணுள் மறைந்து ஆண்டு ஒன்று கழிந்துவிட்டது, அண்டத்தின் பெருஞ்சுழற்சியில் இது ஒரு சிறு துளிதான் நமக்கோ 365 நீண்ட பெரிய நாட்களைக் கொண்ட ஓர் கொடிய ஆண்டு.

எவ்வளவோ கற்றும் வெறுப்பு காழ்ப்பு—பொறுமையை மட்டும் கற்றுக் கொள்ளாமலே செத்துப் போய்விட்ட அந்த பெருந்தகையை முன் வைத்துத்தான் இன்று உலக அரங்கில் தமிழகத்துப் பெருமை ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

அவர் புகழ்முடியின் செங்கோட்டில் வீற்றிருந்து வாழ்ந்த நாளில் அவரை ஆயிரங் கோணங்களில் நின்று விமர்சித்தவர்கள், அவர் புகழ் விளங்கக் காரணமான திராவிட முன்னேற்றக் கழகத்தை அவர் உருவாக்கிய நாளில், நாட்டில் நிலவிய சூழ்நிலையை ஏனோ விமர்சிப்பதில்லை நாம் கொஞ்சம் அலசிப்பார்ப்போம்.

21 ஆண்டுகளுக்கு முன்னாலே அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய பொழுது அவருக்கு வயது நாற்பதே தான்!

அவருக்குத் துணை நின்றவர்களோ அவரினும் இளையோர்!

சொந்தத் தலைவரின் தகாத செய்கை கண்டு வெட்கப்பட்டு வேதனைபட்டு, விரட்டப்பட்டுக் கண்ணீர்த்துளிகள் ஆறாய்ப் பெருகக் கழகத் தோழர்கள் செய்வது இன்னது என்று அறியாது திணறிய நேரம் அது.

நாற்பது கோடி இந்தியரை 150 ஆண்டுக்காலம் அடக்கியாண்ட வெள்ளையர் வெளியேறி கிட்டதட்ட இரண்டாண்டுக் காலமே ஆகியிருந்தது. நிலையில்லாமல் நாடே குழம்பிக்கொண்டிருந்தது, வெள்ளையர் போன சுவட்டோடு, அவர்களை அடியொட்டிச் சந்தர்ப்பவாத முதலாளிக் கொள்ளையர்கள் நாட்டைச் சூறையாடத் திட்டங்கள் தீட்டிக் கொண்டிருந்தார்கள்.

'ஆப்கான்ஸ்தானத்தின் புஷ்பபுரத்தில் கண்டெடுத்த புத்தர் நினைவுச் சின்னங்களைக் கொண்டு அதனையும் இந்தியாவோடு சேர்க்க வேண்டியிருக்க உள்ள பகுதிகளைப் பாகிஸ்தானத்துக்குத் தாரைவார்ப்பதா?' என்று காங்கிரசு மேடைகளில் சில காந்தீயவாதிகள் பேசினார்கள்!

'முஸ்லிம்களுக்காக மத அடிப்படையில் பாகிஸ்தான் பிரிந்துவிட்ட பின்னாலே இந்தியா என்பது 'இந்து தேசம்'தான் என்று இந்துதேச சரித்திரம் படித்த சில பெரிய காங்கிரசுக்காரர்களே கூட புலம்பிக் கொண்டிருந்தார்கள்! அதனாலே முஸ்லிம்களையெல்லாம் பாகிஸ்தானத்துக்குத் துரத்திவிடவேண்டும் என்றும், மதச்சார்பற்ற அரசு இங்கு அமையக்கூடாதென்றும் மேல் நிலைத் தலைவர்களைப் பணிய வைக்க முயற்சி நடந்துகொண்டிருந்தது! இந்தப் பிரச்சினையில் பண்டித ஜவகர்லாலும் வல்லபாய் பட்டேலும்கூட முரண்பட்டு மோதிக் கொண்டிருந்தார்கள்.

விடுதலைப் பெற்ற இந்தியாவின் முதல் கவர்னர்–ஜெனரலான திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்களை 'முதல்' 'இந்து' கவர்னர்–ஜெனரல் என்று பெருமையாக குறிப்பிட்டுக் கொண்டிருந்த நாட்கள் அவை!

நவகாளியில் பல்லாயிரக்கணக்கான மனித உடல்கள் காக்கைக்கும் கழுகுக்கும் பரிமாறப்பட்டதோடு இந்து—முஸ்லிம் வெறித்தனம் ஓய்ந்துவிடவில்லை. 'ராஷ்டரீய சுவயம் சேவக் சங்கம்' போன்ற மத வெறிச் சங்கங்கள் தங்கள் முழுவலிவுடன் வடநாட்டில் பேயாட்டம் போட்டுக் கொண்டிருந்தன.

சரியாகவோ தவறாகவோ இந்துக்களின் காவலர் என்று காட்டப்பட்டுவிட்ட உத்தமர் காந்தியார், இந்திய முஸ்லிம்களும் இந்த மண்ணைச் சேர்ந்தவர்களே என்று சொல்லி இஸ்லாமியரை அணைத்துக்கொண்டதைக் கண்டு பொறாத இந்து மத வெறி மூன்று குண்டுகளாலே அவரை சுட்டுக் கொன்றுபோட்டது!

இந்த நாட்டின் விடுதலைக்காகத் தம் வாழ்வின் எல்லா நலங்களையும் தியாகம் செய்துவிட்ட உத்தமர்கள் கூட, 'இந்து சமய வெறியோடு இணைந்து போகவில்லையென்றால் இதுதான் கதி' என்று மறைமுகமாக அச்சுறுத்தப்பட்ட நிலை அது!

காந்தியார் மறைவையொட்டி, தேசீய வீரர்கள் என்று நம்பப்பட்டவர்களின் வீட்டுத் தோட்டங்களில் புதைக்கப்பட்டிருந்த — கிணறுகளில் மூழ்கடிக்கப்பட்டிருந்த — பயங்கர

(14-ம் பக்கம் பார்க்க)

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 22—2—70 | இதழ் 32


# தீர்ப்பும்—தேவையும்!

நாட்டு மக்கள் பேரார்வத்துடன் எதிர்பார்த்தது போலவே, 14 பாங்குகள் பற்றிய புதிய அவசரச் சட்டம், இந்தக் கிழமை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. தலைமை நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் 14 பாங்கிகளையும், தேசவுடைமையாக்கிக் கொண்டது செல்லாது என்று கூறப்பட்டதுடன், அரசியல் சட்ட விதிகளின்படி, அடிப்படை உரிமைகள் பற்றியும் சுட்டிக் காட்டி இருக்கிறது.

எனவே, நீதிமன்றப் குறிப்பிட்டுக் காட்டியிருக்கும் குறைபாடுகளைக் களைந்து, புதிய அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து, மக்களது வியப்பையும், அதிர்ச்சியையும் துரித கதியில் களைந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

இத்தருணத்தில் நீதிமன்றம் சுட்டிக் காட்டியிருக்கும் "அடிப்படை உரிமைகள்" பற்றி, நாட்டு நலனில் அக்கறையுடையவர்கள் எண்ணிப் பார்க்காமலிருக்க முடியாது.

மத்திய அரசின் முன்னைய சட்டம், செல்லாது என்று அறிவிக்கப்படப் பெரிதும் காரணமாயிருப்பது இந்த "அடிப்படை உரிமைகள்"தான்! இந்த உரிமைக்கு "புனிதமானது" என்று கூறப்பட்டுக் கொண்டிருக்கும் "அரசியல் சாசனம்" இடமளித்திருக்கிறது,

அரசியல் சட்டமாயினும் சரி, நீதிமன்றங்களின் தேவைகளுக்காகவும், விளக்கங்களுக்காகவும், சட்டம்—ஒழுங்கு நிலைக்காகவும் நாடாளுமன்றத்தாலும், மாநில சட்ட மன்றங்களாலும் இயற்றப்படுகின்ற சட்டங்களாயினும் சரி, அவை "மக்கள் நலன்" என்ற அடிப்படையிலேயே இருக்கவேண்டுமேயல்லாது, சட்டப் பாதுகாப்புத் தேடிக்கொண்டு பலரை, சிலர் வஞ்சிக்கும் வாய்ப்பினைத் தருவதாக இருக்கக்கூடாது.

"மக்களாட்சி" என்ற குறிக்கோளில் காணப்படும் தத்துவம், அந்த ஆட்சி மன்றம் இயற்றுகிற சில சட்டங்களால் தோற்கடிக்கப்படுமாயின், மக்களாட்சி என்பதற்கே பொருள் இல்லாமற்போய்விடக்கூடும். வெறும் கண்துடைப்புப் பிரசாரமாகவும் அது ஆகிவிடக்கூடும்.

மக்களுக்காக, மக்களாலேயே ஆளப்படுவதுதான் மக்களாட்சி என்றால், அந்த மக்களாட்சியில் இயற்றப்படுகின்ற சட்டங்களும் மக்களுக்குரியனவாகத்தான் இருக்கவேண்டுமேயல்லாமல், மக்கள்நலனை உறுஞ்சும் சில சுரண்டல் வாதிகளுக்குரியதாக இருக்கக்கூடாதல்லவா?

சுப்ரீம்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு இதுபோன்றசில சுரண்டல்காரர்களுக்குச் சாதகமானதாகத் தோன்றும் போது, இந்தச் சுரண்டல்காரர்கள், மேலும் மேலும் சுரண்ட முடியாதபடி சட்டங்களில் காணக் கிடைக்கும் ஓட்டைகளையும், சந்து பொந்துகளையும் அடைக்க முன்வரவேண்டாமா?

நிலவுடைமைக்கு உச்சவரம்பு வேண்டும் என்ற முழக்கத்தில் எவ்வளவு நியாயம் போதிக்க முடியுமோ, நகர்ப்புறச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு வேண்டும் என்பதை எவ்வளவு நியாயப்படுத்த முடியுமோ, அதைவிடப் பன்மடங்கு வலிவோடு, "முதலீட்டு—மூலதனத்துக்கும்" உச்சவரம்பு தேவை என்பது தவறாக இருக்க முடியாது.

அரசியல் சாசனம் வழங்கும் உரிமைகளைச் சுட்டிக்காட்டி, நிதி மூலதனத்துக்கு உரிமைப் பாதுகாப்புத் தேடிக்கொள்ள வாய்ப்பும், பாதுகாப்பும் உண்டென்றால், நிலவுடைமைக்கு மட்டும் அது இல்லாமற்போய் விடுமா? நகர்ச் சொத்துக்கு மட்டும் இல்லையா?

அதிகப்படி நிலவுடைமையும், நகர்ச் சொத்தும் தடுக்கப்படுவதை அரசியல் சட்டம் அனுமதிக்குமானால், இந்தநிதிமூலதனக்கொள்ளையைமட்டும்தடுக்க அரசியல் சாசனத்தால் இயலாமற் போனதேன்?

"சோஷலிசம்" என்ற சொல்லை, மயக்கும் மந்திரமாக உச்சரிக்க நினைப்பவர்கள் இதுபற்றிக் கவலைப்படத்தேவையில்லை கவலைப்படவும் மாட்டார்கள்.

குடி மக்களுக்கு, வேண்டுவனவற்றையெல்லாம், வேண்டிய முறைப்படி, அளவுப்படி வழங்குவதற்கும், பொருளாதாரம் சமநிலையுடையதாக்கப்பட்டு, அதன் ஏற்றத் தாழ்வை ஒழிக்கவும் கூடிய திட்டங்கள்தான் சோஷலிசம் என்று விமர்ச்சிக்கப்படுமானால், நிலமோ, வீடோ, ரொக்க வசதியோ இல்லாது பல கோடிக் கணக்கானோர் இருக்கும் ஒருநாட்டில் நூறுக்கும் குறைவான ஒரு சிலரிடத்திலேயே இவை முடங்கிக் கிடப்பதற்கு வழிவகை செய்ய வாய்ப்புண்டாக்கப்படுவது சோஷலிசத் திட்டமாகிவிடாது! அரசியல் சட்டம் இதனை அனுமதிக்குமானால், அதனிடம் புனிதம் இருப்பதாகவும் ஏற்க முடியாது.

எனவே, முழுக்க முழுக்க சோஷலிச வாதிகள் என்று இப்போதைய மத்திய அரசைச் சார்ந்தவர்களைக் கூற முடியாவிட்டாலும், தாங்களாகவே கூறிக்கொண்டிருக்கிறதைபோல—சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்காகவேனும், அரசியல் சட்டத்தை மாற்றி, அடிப்படை உரிமைகள்என்றபகுதியில்நிதிமூலதனத்துக்கும், அதன் குவியலுக்கும் ஒரு முடிவு கட்ட முன்வரவேண்டும்.

சமுதாய அமைப்பையோ, சாஸ்திர விதிகளையோ எடுத்துக்காட்டுக்களாகக் காட்டி, முற்போக்கு எண்ணங்களுக்கும், செயல்களுக்கும் முட்டுக்கட்டைப் போடும் நிலைமை, நீடித்துக்கொண்டே வருமானால், எதிர்காலம் நிச்சயம் பயங்கரத்துக்குரியதாகத் தானிருக்கும் என்பது பிழைபடாது. சுரண்டக் கொடுத்துக் கொடுத்து, அல்லற்பட்டு ஆற்றாது வடிக்கும் கண்ணீர் கூரிய வேலாக, வாளாக, துத்தீட்டியாக மாறுவதைத் தடுக்க முடியாமலே போய்விடக்கூடும்.

எனவே, மத்திய அரசு, புதிய அவசரச் சட்டம் பிறப்பித்ததுடனும், அடுத்த நாடாளு மன்றக் கூட்டத்தில் சட்ட முத்திரைக் குத்திக் கொள்வதுடனும் காரியம் முடிந்துவிட்டது என்று கருதினால், அது இன்னுமொரு ஆபத்துக்குத்தான் அறிகுறி என்பதை, இப்போதே, சுதந்திரக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் திரு. படாடியா "புதிய சட்டத்தை எதிர்த்தும் வழக்காடலாம்"—என்று கூறியிருப்பதிலிருந்து தெளிவடையலாம்;




[12]

"ஒன்று கேளும் வைத்தியரே! உமது கீர்த்தி என் செவியில் வீழ்ந்தது" என்று பேச்சைத் துவக்கினுள் பாவை. வைத்தியன் முகத்திலே புன்னகை வதது. "என் கீர்த்தியைக் கேட்டுமா என்னை நிராகரிக்கிருய்" என்று கேட்டது அப்புன்னகை. "பிறகே உம்மை நான் கண்டேன்" என்ருள் நங்கை. உடனே வைத்தியரின் முகத்தில் கவலை குடிகொண்டது. பருவ முதிர்ச்சி, உடல் தளர்ச்சி, ஆகியவைகளை அவள் பார்த்தாள்; ஆகவே நம்மை ஏற்காள் என்ற எண்ணம் உண்டானதால், "மகிழ்ந்தேன்! போற்றினேன்" என்று மேலுமுரைத்தாள் அம்மயிலாள். வைத்தியனுக்குச் சந்தோஷம் மீண்டும் உதயமாயிற்று. நாம் உட்கொண்ட மூலிகை நமது முதுமையை மாற்ருமலா போய்விடும்; வயது அதிகமாளுலென்ன? நமது கெம்பீரம் கெட்டாவிட்டது? அதைக் கண்டே அவள் மகிழ்ந்திருக்க வேண்டும் என்று எண்ணினுன் அந்த ஏமாளி.

அவள் மேலும் கூறினுள், இன்னும் உமது திறமையை நான் பாராட்டுகிறேன். நான் உயிரோடு உங்கள் முன் நிற்பதே உமது அபூர்வ மருந்தின் சக்தியினுல்தான் என்பதை உணருகிறேன். உமது உதவியை நான் மறக்கமாட்டேன்." கிழவன் குமரியின் முகத்தை உற்று நோக்கினுன். அந்தப் பார்வை "உதவி செய்த என்னை உல்லாசப்படுத்து; உன்னை எனக்குத் தந்திடு" என்று கேட்டது. அவனது நோக்கு, நினைப்பு, யாவும் நொடியிலே தூளாகும்படி, நடனு கூறினுள்; "ஆனுல், உம்மைக் காதலிப்பது முடியாத காரியம்; என் நெஞ்சை அவரிடம் நான் தந்து நெடுநாளாகிவிட்டன."

வைத்தியருக்கு வலி அதிகரித்து. விழியிலே கோபம் குதித்தெழும்பிற்று. "அவன் பிரமாதமான வீரன் என்று எண்ணுகிருய், நடனு! அவன்போல் ஆட்கொல்லிகள் அனந்தம்; என்போல் இதமளிப்போர் இலட்சத்தில் ஒருவர்கூடக் கிடையாது" என்று கூறினுர்.

"அரச மன்றத்திலே என்றேனும் ஓர் நாள் உமது அருமையான வாதத் திறமையைக் காட்டுமையா; எனக்குத் தெரியாது வாதம்புரிய" என்ருள் மங்கை. "பேதமை மாதர்க்கு அணிகலமாம்!" என்ருர் வைத்தியர். "மருந்துக்காக நீர் பல சுவடிகளைப் படித்திருப்பீர்; அது ஏட்டுச்சுரை. எனக்கேன் வைத்தியரே அவை! கேளும்; யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பதுபோல, நீர் என்னை நாடி வருவதற்கு முன்பு, உமது கீர்த்தி என் காதைத் தேடிவந்தது. அவர் விஷயம் அப்படியல்ல! அவரை நான் முதலிலே கண்டேன்! அவருடைய கீர்த்தி என்னவென்று அப்போது நானறியேன். உமது கீர்த்தியைக் கேட்டு எங்ஙனம் பாராட்டுகிறேனே அதுபோல், அவரைக் கண்டு, என் நெஞ்சமெனும் கோயிலில் அவரை இருக்கச் செய்துவிட்டேன். மற்றவர்கள் இந்தச் சோழ மண்டலத்திலே, வாள் வீச்சு, ஈட்டி எறிதல், குதிரைச்சவாரி ஆகிய வீர விளையாட்டிலே வீரமணிக்கு நிகர் யாருமில்லை என்று புகழக் கேட்டேன், அவர் நெஞ்சிலே புகுந்த பின்னர், அவரது திறமையை நான் கண்டதுமில்லை, காணவேண்டுமென்று கருதினதுமில்லை. என்னை அவருடைய வாள்வீச்சு வீழ்த்தவில்லை. அவரிடம் நான் நெஞ்சைத் தந்த பிறகே, என் நேத்திரானந்த பூபதி. நிகரற்ற ஓர் போர் வீரர் என்பதை அறிந்தேன். எம்மைப் பிரிக்கும் மருந்து உம்மிடம் இல்லை. வீணே சிரமப்பட வேண்டாம். உண்மையிலே உமது திறமை கண்டு நான் வியக்கிறேன். ஆனுல் வியப்பது வேறு. விரும்புவது என்பது வேறு" என்றுரைத்தாள் நடனு.

"என் திறமறிந்தும் என்னிடம் உனக்கு அன்பு உண்டாகவில்லையா?" என்று கேட்டார் வைத்தியர்.

"திறமையைக் கண்டு வியந்ததும், ஒரு பெண், அந்த ஆடவனைக் காதலிப்பது என்று இருந்தால், வைத்தியரே! பெண்கள் எத்தனை எத்தனை ஆடவரை, நித்தநித்தம் காதலிக்க வேண்டி நேரிடும் தெரியுமா! கழைக்கூத்தன் பனை உயரத்தில் நின்று பம்பரம்போற் சுழன்றாடுவான்; பார்க்க மிக்க ஆச்சரியமாக இருக்கிறது! பாணனின் பாடல் பரமானந்தமூட்டுகிறது; கவியின் கற்பனை உள்ளத்தை உருக்குகிறது. ஓவியக்காரரின் சித்திரம் சித்தமதைக் களிப்புக் கடலிற் செலுத்துகிறது. அலைகடலை அடக்கி மரக்கலம் செலுத்துவோன், புலியையும் பிறவையும் வேட்டையாடிப் பிடிப்பவன், மல்யுத்தம் செய்து மார் நிமிர்த்தும் மறவன், போரில் வெற்றி பெற்றுக் கழலணிந்தோன், ஆகியவருடைய செயல் திறமையாக இல்லையா? எந்தத் திறமையைக்கண்டு வியப்படையாமல் இருக்கிறோம். ஏன்? அரண்மனையின் விகடகவியின் திறமை கண்டு வயிறு வெடிக்கச் சிரிக்கிறோம்! இவ்வளவு பேருடைய திறமையைக் கண்டு சந்தோஷித்தால் அவர்களைக் காதலிப்பது என்று பொருள் இருப்பின், வைத்தியரே! உலகம் ஓர் விபரீதபுரியாகிவிடுமே! இதையேனும் உணரக்கூடாதா?" என்றுரைத்தாள் நடனராணி.

"பெண்ணே! உன் பேச்சிலே அலங்காரம் இருக்கிறது; அறிவு காணப்படவில்லை."

"தங்கள் மனக்கண் குருடாகிவிட்டது, அதற்கு மருந்திடுங்கள் முதலில்."

"மமதை, மகா கொடிய வியாதி"

"வியாதியின் கொடுமை தெரிந்தும் அதை ஏன் வளர்த்துக்கொள்கிறீர்? உமது பேச்சு அதைத்தான் காட்டுகிறது."

"இரக்கமற்ற உனக்கு இயற்கை இவ்வளவு அழகைத் தருவானேன்! குற்றுயிராக நீ மஞ்சத்திலே படுத்துக் கிடந்தபோது, எத்தனை இரவுகள் உனக்காக இந்தக் கண்களை மூடாமல் காத்திருந்தேன்? எவ்வளவு கவலை கொண்டேன்? ஜீவசக்தி உன் உடலில் மீண்டும் வருவதற்காக எவ்வளவு பாடுபட்டேன்? வேறு வேலைகளை விடுத்தேன்; நீ பிழைத்தெழுந்தால் போதுமென்றிருந்தேன். உன்னைச் சாவுக் கிடங்கிலே தள்ளிவிட்டிருப்பார்கள்! நான் உன்னை உலகிலே உலவவைத்தேன். நன்றி கெட்ட நங்கையே! நொந்த உள்ளத்தை நீ மேலும் வாட்டுகிறாய். நான் உன் பொருட்டுப் பட்ட கஷ்டம் எவ்வளவு என்பது உனக்குத் தெரியுமா?"

"பேஷாகத் தெரியும்! என்னை ஈன்றபோது என் தாய் பட்ட கஷ்டத்தைவிடத் தாங்கள் அதிகம் பட்டிருக்க முடியாது. என் தாயே தடுத்தாலும் நான் அவரை நெஞ்சிலிருந்து வெளியே தள்ள முடியாது. என் இருதய சித்திரத்தை அழிக்க முடியாது."

"நீ அழிந்தால்......"

என்று கேட்டுவிட்டு வைத்தியர், மிகக் கோபமாக நடனாவின் அறையை விட்டு வெளியே சென்றார்.

"நீர் என்ன துர்வாசரா, விஸ்வாமித்திரரா, அவளைச் சபிக்க!" என்று கேலி செய்துவிட்டுச் சிரித்தாள் கங்காபாலா. அவள், வைத்தியர் நடனாவிடம் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்தாள் மறைந்திருந்து. வைத்தியர் வெளியே கோபமாக வந்ததும் வழிமறித்துக் கேட்டாள்.

"எங்கள் பேச்சு..." என்று இழுத்தார் அற்புதானந்தர். "கனிகொடுக்க வந்தேன், காதிலே விழுந்தது" என்று பாலா முடித்தாள்.

"இதை வெளியே சொல்லாதே பாலா! உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்" என்று வைத்தியர் வேண்டினார். பாலா "இரகசியத்தைக் காப்பாற்றுகிறேன்; பரிசு உண்டோ..." என்று பேரம்பேசினாள். "வா! வெளியே போய் பேசுவோம் ஏன்? என் வீட்டுக்கே வா. அங்கு..." என்று பேசிக்கொண்டே நடந்தார் வைத்தியர். "அங்கு, என்னையும் கண்ணே கனியே, என்று சரச மொழி பேசி, இசையாவிட்டால் சபிப்பீரோ, என்று திகில் வருகிறதே!" என்றுமேலும் கேலி செய்தபடி, பின் தொடர்ந்தாள் பாலா.


"கங்கா! நான் என்ன காமுகனா" என்றார் வைத்தியர்.

"கண் இருக்கிறதே உமக்கு. கண்ணுக்கு உருவாக எது தெரிந்தாலும், கருத்துச் சுழலுமாம். இதோ பாரும். தேவேந்திரன் நித்த நித்தம் ஜோதி ஸ்வரூபங்களான, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை ஆகியவர்களைக் கண்டு களிப்பவன். பாருங்களேன், ஒரு நாள், எங்கோ பர்ணசாலையிலே இருந்த ஒரு ரிஷிபத்தினியைக் கண்டான்; காதல் கொண்டான். ஆண்களின் சுபாவம் அதுதானே" என்று ஆரியக் கன்னி கேட்டபோது, வைத்தியரின் மனதிலே, "ஆமாம்! இவள் சுந்தரியாகத்தான் இருக்கிறாள். அந்த மண்டைக் கர்வங் கொண்டவளிடம் மண்டியிட்டதைவிட இவளிடம் கொஞ்சம் ஜாடை காட்டி இருந்தாலும் போதுமே! இசைவாளே!" என்று தோன்றிற்று. மனதிலே நடனாவின் சித்திரம்; பக்கத்திலே பாலா. இருவரையும் ஒப்பிட்டான். இருவரும் இளமை எழில் உள்ளவர்களே. ஆனாலும், அந்த நடனாவின் வசீகரம் இவளிடமில்லையே! என்று ஏங்கினான். இருவருமாக வைத்தியரின் வீடு போய்ச் சேர்ந்தனர். நேரத்தை வீணாக்காமல் பாலா, பேச்சைத் துவக்கினாள்.

"வைத்தியரே! வேட்டையாடிய புலி வலையில் வீழ்ந்தது போன்ற நிலை. ஆண்கள், தாங்கள் விரும்பும் கன்னி இசைய மறுத்தால் பெறுவராம். உமக்குள்ள நிலை அதுதான். நான் தெரிந்துகொண்டேன். ஆனால் வெறும் ஆத்திரம் பயன் தராது. சபித்துவிடவும் முடியாது" என்றாள். விசாரத்திலாழ்ந்த வைத்தியர், "பாலா! அப்படியானால், நான் அவளை மறக்கத்தான் வேண்டுமா? அந்த ஒளி வீசும் கண்களை, துடிக்கும் அதரத்தை, கொடி இடையை ......" என்று பெருமூச்சுடன் பேசலானார்.

"சரி! சரி! அவளை நீர் வர்ணித்துக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டிருக்க நான் வரவில்லை. அவள் அதிருபவதியா இல்லையா என்பதுபற்றி எனக்கொன்றும் கவலை இல்லை. அவளைப் பிச்சை கேட்டீர்; அவள் காரித் துப்பினாள். நீர் இப்போது என்ன செய்யப் போகிறீர். அதுதான் கேள்வி" என்றுரைத்தாள்.

"என்ன செய்வது? ஏங்கிச் சாவது" என்றார் வைத்தியர். "அவளுக்காக?" என்று கேட்டாள் பாலா. வைத்தியரின் பெருமூச்சுதான் பதில் கூறிற்று.



"நீர் இறந்துவிட்டால், அவளை அடைந்ததாக அர்த்தமா?" என்று கேட்டாள் பாலா.

"வெந்த புண்ணிலே, வேலைக் குத்துகிறாய்! என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

"வஞ்சந் தீர்த்துக்கொள்."

"கற்பழிப்பதா?"

"சீ! அவளை அழிப்பது. ஏன், உம்மிடம் வகை வகையான விஷமில்லையா! ஏதாவதொன்றை மருந்துடனோ, உணவுடனோ கலந்து தந்தால் ஒழிகிறாள். உமக்கு இணங்க மறுத்த அவள், பிறகு எவனாவது ஒரு வீரனுடன் கூடி ஆடிக் கிடப்பதைக் கண்டால், நீர் புழுப்போல் துடிக்கமாட்டீரா?"

"துடிப்பேன். ஆனால் அதற்காக அவளைக் கொல்வதா! சீச்சீ! கூடாது அக்கொடுஞ் செயல்."

"ஓஹோ! காவியணிய உத்தேசமா?"

"அதுவுமில்லை"

"வைத்தியரே! உடலிலே, நோயூட்டும் கிருமிகள் இருந்தால், கிருமிகளை அழிக்க நீர் மருந்திடுவதில்லையா? கிருமிகள் சாகுமே என்று பரிதாபப்பட்டால், கிருமி. ஆளைக் கொல்லாதா? நடனா, உமது வாழ்வை வதைக்கும் கிருமி, நீர் அந்தக் கிருமியை அழிக்காவிட்டால், உம்மைக் கிருமி அழித்துவிடும்."

"ஆமாம்!"

"எதற்கெடுத்தாலும் ஆமாம், ஆமாம், என்று கூறுகிறீர். துணிவாக எதையேனும்செய்யச்சொன்னால், ஐயோ, ஆகாது, என்கிறீர். சுத்தப் பித்துக்கொள்ளியாக இருக்கிறீர்."

"பாலா! நீபேசுவது, கேட்கவே எனக்குப் பயமாக இருக்கிறது.',

"கோழைத்தனம். உமக்கு ரோஷம் இல்லை. அரண்மனையிலே ஒரு பணிப் பெண் அவள். அவள் உம்மைத் துப்பினாள். உமக்கு உணர்ச்சி இல்லை.

நான் ஆணாக இருந்து, எனக்கு அக்கதி நேரிட்டிருந்தால், நடனா இவ்வளவு நேரம் உயிரோடு இருக்கமுடியுமா? மானத்தை இழக்க உமக்கு மனமிருக்கிறது. உமது இஷ்டப்படி செய்யும் எனக்கென்ன? அரண்மனையிலே, இனி உம்மைப் பற்றித்தான் ஓயாது கேலி செய்வார்கள். நீர் தலைகாட்டினால் போதும்; இதோ பாரடி. மருந்து கொடுக்க வந்த கிழவன், நடனாவை இழுத்தானாம்; அவள் உதைத்தாளாம் என்று கேலி செய்வார்கள்."

"உண்மைதான். ஊர் பூராவும் கேலி செய்யும்."

"பிறகு உமது மதிப்புப் போகும்."

"போய்விடும். ஆ-மா-ம்"

"அரண்மனை வைத்தியமும் போகும்."

"ஆமாம்"

"இவ்வளவு ஆபத்தும் அந்த ஒரு சிறுக்கியினால்."

"என் வாழ்வுக்கே பெரிய ஆபத்து."

"புத்தி இருந்தால், அதை நீக்கிக்கொள்ளலாம்"

பொற்கொடி போன்றவளை விஷமிட்டுக்கொல்வதா?"

"வேண்டாம் வேண்டாம்! அவள், வேறோர் புருஷனிடம் கொஞ்சி விளையாடும்போது, நீர் அங்கே போய் அவனுக்கு அடைப்பந்தாங்கும்."

"பாலா! பதட்டமாகப் பேசாதே."

"பேசினால் என்ன? பெண்ணுக்குப் பயப்படுபவர் நீர் என்னை மிரட்டுகிறீரே."

இந்தச் சம்பாஷணைக்குப் பிறகு, அவசர அவசரமாக வைத்தியர், தமது மருந்துப் பெட்டிகளைத் தேடினார். ஒரு சிறு கருநிறமாத்திரையை எடுத்தார். கண்களிலே மிரட்சியுடன், அதைப் பாலாவிடம் கொடுத்தார், இதை அவள் உட்கொண்டால் ஒழிந்

தாள். விஷம் பருகிச் செத்தாளென்று யாராலும் கண்டுபிடிக்க முடியாது. அவ்வளவு ஆபூர்வமானது இது, இயற்கையான மரணமாகவே தோன்றும். பாலா! இனி என்னெதிரில் இராதே என் மனம் மாறிவிடும் போ! போ! நடனு ஒழியட்டும்" என்று கூவினர். பாலா, ஆவலுடன் அந்த மாத்திரையைப் பெற்றுக்கொண்டு, இது ஆண் மகனின் தீரம். வைத்தியரே! உமது வாக்குப் பலிக்கும். விரைவிலே நீர் நடனுவின் மரணச் செய்தியைக் கேட்பீர்" என்று கூறிவிட்டு, விடை பெற்றுக்கொண்டாள். அவள் வாயிற்படித் தாண்டுமுன்னம் வைத்தியர், மீண்டும் அழைத்தார்.

"ஏன்? மனம் மாறிவிட்டதா?" என்று பாலா கேட்டாள்.

"இல்லை! ஆனல் உனக்கு நடனு மீது இவ்வளவு விரோதம் ஏன்?" என்று கேட்டார்.

"உமக்கேன் அவளிடம் அவ்வளவு பிரேமை உண்டாயிற்று?" என்று கேட்டாள் பாலா.

"நீர் அவள் அழகிலே சொக்கினீர்; நான் அவளுடைய நிலைகண்டு, நினைப்புக் கண்டு அவளை வெறுக்கிறேன். அவள் எனக்கு நஞ்சு; உமக்குந்தான்! அவள் ஒழியத்தான் வேண்டும்."

"என்ன இருந்தாலும், பாலா நடனுவுக்குவிஷம் கொடுக்க எனக்கு மனம் இடந்தரவில்லையே" என்றார் வைத்தியர்.

"அது சரி! கிடைத்த மாத்திரையை இழக்க நான் இசைவேனு? வைத்தியரே, நீர் நமது சம்பாஷணையை, முற்றிலும் மறந்துவிடும். நீர் ஏவிய மரணம், அவளைத் தழுவக் காண்பீர் விரைவில்" என்றாள் பாலா.

"என் பின்னேடு, வா. ஊர்ப்புறமாக உள்ள சத்திரத்துக்கு" என்று ஒரு குரல் கேட்டது. கங்கா திடுக்கிட்டாள். உருவம் முகத்தைக் காட்டினதும். "நீயா? என்ன விசேஷம்?" என்று கேட்டாள். "அங்கே சொல்கிறேன், நட" என்று அதிகாரத் தோரணையிலே அந்த உருவம் கூறிக்கொண்டே நடந்தது, பாலா அதனைப் பின்தொடர்ந்தாள். உருவம் சரியாக வெளியே தெரியாதபடி மேலே ஓர் போர்வையுடன் காணப்பட்டது.

இருவரும் ஊர்க்கோடியிலிருந்த சத்திரத்தை அடைந்தனர். சுற்றுமுற்றும்பார்த்துவிட்டு வந்தவன் பாலாவைப் பார்த்து 'பாலா! நீ சுத்த மக்கு! ஒரு காரியமும் நடப்பதில்லை. அரண்மனையிலே ஒரு துளி கூடக் கலகம் ஏற்படவில்லை; மாதா மாதம் பணம் பெறுவது மட்டுமே வேலை என்று எண்ணுகிருய். நமது நோக்கம் ஈடேற ஒரு வழியும் செய்யக் காணேம்" என்று கடிந்துரைத்தான். பாலாவின் முகத்திலே கோபமும் சலிப்பும் கலந்து வீசிற்று. ஏதோ பேச வாயெடுத்தாள், 'வந்தவன், அதைத் தடுத்துவிட்டு, மேலும் பேசினன்; "பாலா! உனக்கு மட்டுந்தான் இந்த அர்ச்சனை என்று எண்ணுதே; எனக்குந்தான் இன்று வந்த ஓலையிலே, எனக்கும் ஒரு முழ நீளமுள்ள அர்ச்சனை நடந்திருக்கிறது. கலிங்கப்போர் நடந்தபோது சோழமண்டலத்திலே கலகம் நடக்கும்படி ஏன் தூண்டவில்லை? எதற்கு நீ ஜெனனமெடுத்தாய்? குல முன்னேற்றத்தைக் கவனியாத நீ பிறந்து பயன் என்ன? என்றெல்லாம் எனக்கும் வசவு கிடைத்திருக்கிறது. நான் எவ்வளவோ கரடியாகத்தான் கத்தினேன். போரை ஆதரிக்க வேண்டாமென்று; பலிக்கவில்லை. நான் என்ன செய்வேன்? பாலா! நமக்கு அவர் கட்டளைகள் பிறப்பிக்கிருரேயொழிய நமக்கிருக்கும் கஷ்டங்கள் தெரிகிறதா? சோழமண்டலம் என்ன மலர்புரியா? அங்குதான் ஒரு ஸ்திரி கிடைத்தாள்; அவர் ஆட்டிவைக்கிருர். இங்கு முடியுமோ? பாலா எனக்கு இருக்கும் கஷ்டந்தானே உனக்குமிருக்கும். இருந்தாலும் அவர் சொல்லியனுப்பியதை உனக்குக் கூறினேன். என் மீது கோபங்கொள்ளாதே" என்றுரைத்தான்.

"பதஞ்சலி! உன் மீது கோபித்து என்ன பயன்? நானும் என்னுலானதைச்செய்துதான் பார்க்கிறேன். ஒன்றும் சரியாக முடிவதில்லை. இப்போதும் ஒரு அருமையான ஏற்பாடு என் மனதிலே இருக்கிறது. எனக்கு அந்தப் புரத்திலே ஒரு தடையாக இருக்கும் நடனு என்ற நாட்டியக்காரியைக் கொன்றுவிடத் தீர்மானித்துவிட்டேன். அருமையான விஷயம் கிடைத்திருக்கிறது. ஒரு வைத்தியனிடமிருந்து. அவளிடம் காதல் வேண்டினன்; அவள் மறுத்தாள் இடையிலே நுழைந்தேன்; இதைப்பெற்றேன்" என்று கூறி, மாத்திரையைப் பாலா காட்டினுள்.

"விஷமிடுவதா?" என்று கேட்டான் பதஞ்சலி.

ஏன்? பாபம் சூழ்ந்து கொள்ளுமோ?" என்றுகேலியாகக் கேட்டாள் பாலா.




## அன்று சொன்னவை!

தம்பி! என்ன புத்தகம் படித்துக்கொண்டிருக்கிருய்?—என்று கேட்டால், என்ன பதில் கிடைக்கும் தமிழ் நாட்டில், இன்று! கலித்தொகை என்ரு? பரிபாடல் என்ரு? ஐங்குறு நூறு என்ரு? அகம் என்ரு? புறம் என்ரு? அல்ல—அல்ல! அல்லி அரசாணி மாலையாக இருக்கும், பழமை விரும்பியாக இருந்தால், அல்லது அலிபாபா கதையாக இருக்கும் புதுமை விரும்பியாக இருந்தால்!

# அதனால்-அவர் காமராசர்!

அன்புள்ள நண்பா!

1867-ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 16-ம் நாள் நள்ளிரவு 2மணிக்கு பேரறிஞன் ஒருவன், தன் நண்பன் ஒருவனுக்குக் கடிதம் எழுதுகிறான்;

> "..........So, this volume is fnished. This has been possible thanks to you alone. Without your self-sacrifice for me, I could never possibly have done the enormous work for the three volumes. I embreoe you, full of thanks!...Greetings, my dear, beloved friend"

இப்படி எழுதவேண்டிய அவசியமென்ன? முழு உழைப்பும் தன்னுடையது. 15 ஆண்டுக்கால உழைப்பின் அறுவடையில், அந்த நூலின் முதல் பாகம் அச்சேறி விடுகிறது. முற்றுப்பெற்ற அந்த நாளில், அதற்குரிய நன்றியை செலுத்த வேண்டியவனுக்குச் செலுத்துகிறான். எப்படி?

> "...இந்த முதல் பாகம் முற்றுப் பெற்றுவிட்டது. நீ ஒருவனே அதற்குக் காரணமானவன். என் நன்றியை ஏற்றுக்கொள். என் பொருட்டு நீ தியாகம் செய்திராவிட்டால், இந்த நூலின் மூன்று பாகங்களையும் நான் எழுதி இருக்கவேமுடியாது. முழு நன்றியுடன் உன்னைத் தழுவிக் கொள்கிறேன். என் அன்புள்ள, உண்மையான நண்பனே. உன்னை வாழ்த்துகிறேன்"

இப்படித்தான் நன்றியைச் செலுத்துகிறான் அந்தப் பேரறிஞன், நண்பனுக்கு. எதற்காக? யார் எழுதியது? யாருக்கு?

கார்ல்மார்க்ஸ் என்பவன், பிரடெரிக் எங்கெல்சுக்கு எழுதுகிறான் இப்படி. மார்க்சின் நிழலாக விருந்து கொண்டு, அவனுக்கு உயிர் மூச்சைத் தந்துகொண்டிருந்தவன் எங்கெல்ஸ். எங்கெல்சின் உதவிகள் இல்லையென்றால் மார்க்சின் வரலாறு வேறு மாதிரியாகக்கூட இருந்திருக்கக்கூடும்.

தன் "மூலதனம்" என்ற நூலின் முதல் பாகம் அச்சியற்றி முடிந்தவுடனேயே உதவிகள் செய்துவந்தவனுக்கு நன்றி கூறுகிறான். நீ இல்லையென்றால், நான் ஏது? என்கிறான்! நான் இப்படி மூன்று பாகங்களையும் எழுதியிருக்க முடியாதே! என்று எடுத்துக் காட்டுகிறான். செய்நன்றி கொல்லும் சிறுமை என்பால் இல்லை என்பதற்கடையாளமாக, இப்படி எழுதிக் காட்டுகிறான்.

இருவருக்கிடையேயும் நடைபெற்ற நூற்றுக் கணக்கான கடிதப் போக்கு வரத்துக்களில் இதுவும் ஒன்று! அவ்வளவுதான்! மார்க்ஸ், தன் நன்றியை, தக்கமுறையில், தக்கார்க்கு எடுத்துக் காட்டுகிறான் அவசியம் ஏற்பட்ட பொழுது என்பதுதான் இக்கடிதத்தின் மூலம் நாம் தெரிந்துகொள்வது.

நன்றிக்கும், உரிமைக்கும் இன்னொருவன் இருக்கும்போது, அதனை மறைத்துவிட்டு, தானே அனைத்துக்கும் உரியவன் என்றாக்கிக் காட்டும் அகந்தையினை இதிலே காணமுடியவில்லையல்லவா நண்பா!

கார்ல் மார்க்ஸ், தன் சித்தாந்தத்தின் முழு வடிவையும் அமைத்துக்கொள்ள, இரவு பகல் பாராது 15 ஆண்டுக் காலம் எடுத்துக் கொண்டானாம்!

உனக்குத் தெரியுமா நண்பா, தமிழகத்திலே ஒரு கார்ல்மார்க்ஸ் தோன்றி இருக்கும் சுவையான செய்தி!

நீ சிரிக்கிறாய்! தமிழகத்துக் கார்ல் மார்க்ஸ், நம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டுக்கு மேலாயிற்றே—இப்போது தோன்றி இருக்கிறார் என்று கூறுகிறேனே என்றெண்ணி சிரிக்கிறாய். தெரிகிறது. நண்பா, முன்னர் கடிதம் எழுதியதாகக் குறிப்பிட்ட மார்க்சுடன் ஒப்பிடத்தக்க நம் பேரறிஞர் நமைப் பிரிந்து போய்விட்டார். உண்மைதான்!

ஆனால், ஜெர்மானிய யூத குலத்துக் கார்ல் மார்க்சைப் பழிக்கும் வகையில் இப்போது தமிழகத்திலே ஒருவர் தோன்றியிருக்கிறார்? இல்லை. இல்லை, உருமாறி இருக்கிறார். திகைக்க வேண்டாம்! வியக்கவும் வேண்டாம்—நம்மரும் தலைவர் காமராசர் இருக்கிறாரே அவர் இப்போது, தன்னை யொரு கார்ல் மார்க்ஸ் என்று அறிவித்துக் கொண்டிருக்கிறார். அவ்வளவுதான்!

சென்ற கிழமை 'காஞ்சி'யில், அவரது மொழிக் கொள்கை பற்றிப் படித்தாயல்லவா! அவரது மொழிக் கொள்கை அதுதான் என்று எடுத்துக் காட்டி இருப்பது நவசக்தி! நவசக்தியின் ஆதாரப்படி, இந்தக் கொள்கையைக் கண்டுபிடித்திருக்கும் தத்துவம்தான் அறிவு பூர்வமானது!

இதனைத்தான் ஏற்கெனவே, தி. மு. கழகம் மேற்கொண்டு, நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறதே என்றெல்லாம் கேட்டுவிடக் கூடாது. இது காமராசரது அரிய கண்டு பிடிப்பு.

ஒரே ஒரு வேறுபாடு. கழகம் இந்தி வேண்டாம் என்கிறதாம்! காமராசர், அது வேண்டப்படுபவர்க்கு இருக்கட்டும் என்கிறாராம்! அதனால், கழகக் கொள்கை

யிலிருந்து மலையளவு வேறுபாடு கொண்டிருக்கிறதாம் அந்த தத்துவம்!

பூசலும், புகைச்சலுமின்றி அமைதியாக இருந்து கொண்டிருக்கும் தமிழ் நாட்டுக்குள்ளே, போரையும் போராட்டத்தையும் கொண்டு வந்து நுழைப்பதற்காகக் காமராசர் வகுத்திருக்கும் தத்துவம் இது!

மொழிப் பிரச்னையைத் தொட்டால்தான் உணர்ச்சியினைத் தூண்டிவிட முடியும் என்ற ஞானோதயம் ஏற்பட்டிருக்கிறது.

முதலமைச்சராகவும், அ. இ. கா, க.வின் தலைவராகவும் இருந்த காலத்திலெல்லாம் தோன்றாத ஞானோதயம் இது—என்று எண்ணிவிடக் கூடாது.

அப்போதே ஏற்பட்ட ஞானோதயம்தான் இது! அந்தச் சந்தர்ப்பங்களில் இதனை வெளிப்படையாகக் கூறமுடியாத நிலைமையிலிருந்தார். இப்போது அந் நிலைமை மாறிவிட்டது. ஆகவே, குழி பறிக்க நினைக்கிறார்.

பறிக்கும் குழி, கழகத்துக்கும் அதே வேளையில் இந்திராவுக்குமாக இருக்கவேண்டும் என்ற கேவலமான எண்ணத்தில், கோண்ட முனைகிறார். குழியில் விழப் போவது யாரோ?

காமராசர், மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட்டதாகக்கூட நவசக்தி ஆர்ப்பரித்திருக்கிறது.

மார்க்சியம் ஒன்றுதான், உலகப் பாட்டாளி மக்கள் அனைவரையும் ஒரு குடைக்கீழ் கொண்டுவரும் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

இதைப்போல். இந்தியத் துணைக்கண்டத்து மொழிச் சிக்கலைத் தீர்த்து வைக்க, ஆங்கிலம் ஒன்றினால்தான் முடியும் என்பதையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆனால் நண்பா, ஒருவர் பெற்ற பிள்ளைக்குத் தான் தகப்பனாக இருக்க முன்வந்து, தான்தான் தகப்பன் என்றும் பிரகடனப் படுத்திக்கொள்ள நினைக்கிறாரே காமராசர் — அதனைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை.

> "இந்தி பேசாத பகுதியில் உள்ள மக்கள் விரும்பும் வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இணைப்பு மொழியாக இருக்கும்; இந்தி பேசாத மக்களின் உணர்ச்சி மதிக்கப்படும். இதில் அணு அளவும் ஐயமில்லை."

என்பதுதான் மறைந்த பண்டிதர் நேரு நாட்டு மக்களுக்குத் தந்த வாக்குறுதி,

> இந்த வாக்குறுதியைச் சட்டமாக்கிக் கொடு.

என்று முதன் முதல் கேட்டது, அப்போது மாநிலங்களவை உறுப்பினராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள்தான்.

> உயர்ந்த கருத்துக்களையும், கொள்கைகளையும் புத்தகங்களில் எழுதுவதோ, மேடையில் பேசுவதோ எளிதானதுதான்; அவ்வாறு நடந்து காட்டுவதுதான் அரிதாகும்.

என்று நேருவே 1952-ல் கூறியிருக்கிறார், வள்ளுவப் பெருந்தகைகூட "சொல்லுதல் யார்க்கும் எளிய ; அரிய வாம், சொல்லியவண்ணம் செயல்" என்று குறிப்பிட்டுக காட்டியிருக்கிறார். 'நேருவே' சொன்னதைச் சொன்னபடி செய்ய முடியாதவராக ஏங்கிக் கிடந்தார் என்று சொல்லப்படுகிறது. பேரறிஞர் கேட்டதுபோல் தன் வாக்குறுதியைச் சட்டமாக்கிக் கொடுக்கவும் நேருவால் முடியவில்லை. 1968-ல்தான் இந்திராகாந்தி தீர்மானம் என்பதன்பேரால் ஏதோ ஓர் கண் துடைப்புச் செய்து தந்தார்.

இந்தக் காலங்களில் எல்லாம் இல்லாத உணர்ச்சியும், தோன்றாத ஞானமும் இப்போது வந்து தோன்றி விட்டதாம்! உணர்ச்சி கரைபுரண்டு ஓடத் தொடங்கி விட்டதாம்.

> நேருவின் வாக்குறுதியை சட்டமாக்குவது ஒன்றுதான் மொழிப் பிரச்னையைத் தீர்க்கும் வழி.

என்று 1963லேயே அண்ணா அவர்கள் சொல்லிவிட்டார்கள். தீர்ப்புக் கூறி இருககிறார்கள்.

ஆனால் காமராசர், 1970-ல் சேலத்தில் மாணவர்களின் பேரால் ஒரு தீர்மானத்தைக் கொணர்ந்து மொழிச்சிக்கலுக்குத் தீர்வு காட்டுகிறாராம்.

> சட்டமாக்குவதுதான் சிக்கல் தீரவழி

என்பதாக! நவசக்தியும் இதை எடுத்துக் காட்டி, பாரீர், பாரீர்! எமது தேசியத் தலைவரின் அரும் தத்துவம் பாரீர்! என்று சொல்லிக்கொள்கிறது.

பேரறிஞர் அண்ணாவின் கருத்தை காமராசர் ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்றுதான் இதற்குப் பொருள் கொள்ளமுடியுமே தவிர, காமராசர் ஒரு தத்துவத்தைக் கண்டுபிடித்துவிட்டார் என்று எப்படிக் கூறமுடியும் நண்பா!

மார்க்ஸ், நன்றி கூறிக்கொள்ளுகிறான், எங்கெல்சுக்கு! காமராசர்?

மார்க்சுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதுகூட, அந்தப் பெருமேதைக்குக் களங்கமாகிவிடக்கூடும். தவறான ஒப்பமைதான்! இதற்காக அந்தமேதையிடம்மன்னிப்புக் கேட்டுக்கொண்டால்கூட தவறில்லைதான்.

ஆனால் நண்பா, தி. மு கழகம், மத்திய அரசுடன் போராடவேண்டும் என்று ஏன் நமக்கு அறிவுரை கூற முன் வருகிறார்?

தி. மு. க., எம். பி.க்கள் இருபத்தைந்து பேர் மட்டுமே இருக்கிறார்கள். காமராசர் சார்ந்திருக்கிற சிண்டிகேட்டில் எத்துனைவர் இருக்கிறார்கள்? இப்போது தான் அறிவு வந்தது என்று ஒப்புக்கொண்டால் கூட, அந்த எம். பி.க்களை விட்டு இந்திராவுடன் மோதச் செய்திருக்கலாமே? மோதும் அளவுக்குத் துணிவில்லையா? அல்லது இந்திரா அரசைக் கவிழ்க்கும் புண்ணியத்தைத்தானே கட்டிக்கொண்டதாக உலகு உணரக்கூடாது என்ற பெருந்தன்மையா?

இந்திராவைக் கவிழ்த்துவிடவேண்டும்—இப்போதைய மத்திய அரசைச் செயல்படவிடக்கூடாது என்றுதான் காமராசரிலிருந்து மொரார்ஜி வரையில் நினைக்கிறார்கள். ஏற்றவிதமாகவும் செயல் படுகிறார்கள். அப்படியானால் இந்திப் பிரச்னையுடன் கழகத்தைச் சேர்த்து இந்திராவுடன் மோது என்பானேன்?

நண்பா, தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் மொழிப் பிரச்னையிலும் சரி, இந்தி விவகாரத்திலும் சரி, தி. மு. க வுக்குள்ள அக்கறையும், செயல் திறனும் வேறெந்தக் கட்சிக்குமில்லை என்பது நாடறிந்த ஒன்று.

> திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிரும், மூச்சும், தமிழ், தமிழர் தமிழ்நாடுதான்.

என்பதை அறிந்திருந்தும், காமராசர் நம்மோடு மோத நினைப்பது ஏன்? பேரறிஞர் அண்ணாவின் கருத்தைத் தன்னுடையதாக்கிக்கொண்டு உலகை ஏமாற்ற நினைப்பது எதனால்?

காமராசரது அரசியல் இனி வடநாட்டில் செல்லுபடியாக முடியாது என்பது அவருக்குப் புரிகிறது. முழுக்க முழுக்க தன் அரசியலை இனிமேல் தமிழ் நாட்டுக்குள்ளேயே தான் நடத்தித் தீரவேண்டும் என்பதையும் அவர் உணர்கிறார்.

தமிழ் நாட்டுக்கு ஏற்ற அரசியலை நடத்தவேண்டுமென்றால், தமிழர்தம் உணர்ச்சியினைத் தூண்டிவிட வேண்டும்.

அதை தி. மு. க. மேற்கொண்டிருக்கிறது. உணர்ச்சியினைத் தட்டி எழுப்புவது மட்டுமேயல்லாமல், அவர்களது விழைவுகளையும் ஒவ்வொன்றாய்த் தீர்த்துக்கொண்டிருக்கிறது தி. மு. க.

எனவே தன் கடையைப் பரப்ப வழியில்லாத நிலையில், காமராசருக்கு கழகத்தைத் தினைரச் செய்ய வேண்டும் என்ற "அரசியல்" தந்திரம் உருவாகி இருக்கிறது.

மக்களை மதியாத தன்மை—காமராசருக்கு இருப்பதைப்போல், கழகத்துக்கும் உண்டு என்ற தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டதால் ஏற்பட்ட விபரீதம் தான் இது,

தான் ஆட்சிக்காலில் அமர்ந்திருந்தபோது மக்களை மதியாதவராக இருநததுபோல், கழகஅரசும் இருக்கும் என்று நினைக்கிறாரே, பரிதாபத்துக்குரியவர்! என்ன செய்வது?

கழகத்தின் மொழிக் கொள்கையை தன் கொள்கை என்றாக்கிக்கொண்டு, அதுதான் தன் வருங்கால அரசியல் என்றும் பேசிக்கொண்டு. கழகத்தை இந்திராவுடன் மோதும்படி அறிவுரைக்கிறார்.

இந்தி விவகாரத்தில் கழகத்தின் கொள்கை தெளிவானது—தமிழக மக்கள் உணர்ந்து கொண்டிருப்பது.

எந்த நேரத்தில் எதனைச் செய்ய வேண்டும் என்று கழகம் அறியும். ஒருவனது பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு, காலை வாரிவிடும் கீழ்மைச் செயலுக்கு என்றுமே கழகம் தீனி கொடுத்ததில்லை. இந்திரா அரசின் பலவீனத்தை, பேரம் என்பதன் பேரால் பயன்படுத்திக்கொள்ளும் கீழ்நிலைக்கு என்றும் கழகம் வராது, பேரறிஞர், கழகத்துக்கு அதுபோன்ற பாடங்களையும் போதிக்கவில்லை. அதனாலேயே அவர் அறிஞராக இருந்தார். ஆனால் காமராசர், இன்றும் காமராசராகத் தானே இருக்கிறார்? நண்பா, காமராசரது 'சேலம்' பற்றி நாடாளு மன்ற நமது உறுப்பினரும். தமிழக முதலமைச்சரின் மருமகனுமான திரு, முரசொலி மாறன் அவர்கள் கூறியிருக்கும் கருத்தின் சில பகுதியை மட்டும் தந்திருக்கிறேன்:

"இந்தித் திணிப்பைப் பொறுத்தவரையில் கழகத்தின் நிலை தமிழக மக்களுக்குத் தெரியாதா?

தமிழகப் பள்ளிகளில் இந்திக்கு இடமில்லை என்று சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டது கழக அரசு தானே!

தேசிய மாணவர் படையில் ஆங்கிலக் கட்டளைச் சொற்கள் இருக்கவேண்டும்; இல்லாவிட்டால் அப்படை கலைக்கப்படும்—என்று தீரமிகு தீர்மானத்தை நிறைவேற்றியது கழகமல்லவா?

அதற்குப் பிறகு இந்திரா காந்தியார் அரசாங்கம் அல்லவா இறங்கிவந்து, இந்திக் கட்டளைச் சொற்கள் நீக்கப்படுவதற்கு உடன்பட்டது?

தமிழ்த் திரைப் படங்களுக்குத் தரப்படும் தணிக்கைக் குழு சான்றிதழ்களில் திடீரென்று இந்தி திணிக்கப்பட்டபோது, இந்திரா காந்தியார் அரசின் நட்வடிக்கைகளை யெல்லாம் ஆதரிக்க வேண்டும் என்று அதைப் பொருட்படுத்தாம லிருந்தோமா?

கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்திருக்காவிட்டால் இதற்காக ஒரு பெரிய போராட்டமே நடத்த வேண்டியிருக்கும், ஆனால், தமிழர்கள் தங்களுக்குப் பாதுகாப்பாக கழகத்தின் கையில் ஆட்சியை ஒப்படைத்த காரணத்தால் நமது தமிழக முதல்வர் டில்லிக்கு ஒரு தந்தி கொடுத்தார்; 'கத்தியின்றி, ரத்தமின்றி, யுத்தமொன்று வருகுது' என்ற கவிதை வரிகளைப் போல, ஆர்ப்பாட்டமின்றி போராட்டமின்றி ஒரு தந்தியின் மூலமே காரியத்தில் வெற்றி பெற்றோம்!

—இப்படித் தமிழகத்தில் கழக ஆட்சி இருப்பதால் அது இந்தி வெள்ளம் ஊடுருவ முடியாமல் தடுக்கும் அணையாக இருக்கிறது!

இதனால் மேற்கொண்டு இந்தித் திணிப்பு ஏற்பட முடியாமல் தடுக்க முடிகிறது. ஆனால் அதே நேரம் பதவியிலிருந்து இந்திப் பேயோடு போரிட முடியாத நிலை உருவாகுமேயானால், பதவியை உதறி எறிந்து விட்டுப் போராட்டத்தில் குதிக்கத் தயார்—என்றும் கழகத் தலைவர்கள் அவ்வப்போது அறிவித்திருக்கிறார்கள்!

இந்திரா காந்தியார் அரசாங்கத்தைத் தி. மு. கழகம் ஆதரிக்கிறது என்றால், அது நிரந்தரமாகத் தரப்படுகிற—நிபந்தனையற்ற—ஒட்டுமொத்த—கண்முடி ஆதரவு அல்ல!

அல்லது, கைம்மாறு என்கிற பிரதியுபகாரம் பெற்றுக்கொண்டு அல்லது எதிர்பார்த்துக்கொண்டு தரப்படுகிற ஆதரவும் அல்ல!

அவ்வப்போது எழுகிற பிரச்னைகளின் தாரதம்மியத்தை எடைபோட்டுப் பார்த்து, அது கழகக் கருத்திற்கு உடன்பாடானதாக இருந்தால் கழகம் அந்தப் பிரச்னைக்கு மட்டும் ஆதரவு தந்துவருகிறது.

உதாரணமாக, பாங்கிகளை அரசுடைமையாக்குகிற கொள்கை கழகத்திற்கு உடன்பாடான கொள்கை! எனவே அக்கொள்கையை நிறைவேற்றுகிற நேரத்தில் நாம் இந்திரா காந்தியார் அரசினை ஆதரித்தோம்!

அடுத்து, திரு. ஜெகஜீவன்ராம் வருமானவரி கட்டாத பிரச்னை வந்தது. நமது கொள்கைத் தராசில் வைத்து எடை போட்டோம்; சரியல்ல என்று தெரிந்ததும், நாம் எதிர்த்தோம். இதன் காரணமாக இந்திரா காந்தியார் அரசுக்கு இடைஞ்சல் நேருமே என்பது பற்றி நாம் கவலைப்படவில்லை!

காமராசர் கைதேர்ந்த அரசியல் வியாபாரியாதலால் அவர் பேரம் பேசச் சொல்கிறார்!

"நாங்கள் 25 ஓட்டுகளைத் தருகிறோம்; நீ பாங்கிகளைத் தான் தேசியமாக்கு; அல்லது எதையாவது செய்! கண்ணை மூடிக்கொண்டு கை தூக்குகிறோம்; பதிலுக்கு நீ என்ன தருகிறாய்?"—என்று நம்மைப் பேரம் பேசச் சொல்கிறார்!

அவர் நடத்துகிற அரசியல் அப்படி; பேரம் பேசிப் பேசி தேர்தலுக்கு ஆள்பிடித்து; வாக்கு சேகரிக்கிற பழக்கம் போகவில்லை!

ஆனால் காமராசரிடம் அரசியல் கற்கவேண்டிய அவசியத்தில் கழகம் இல்லை!

இன்னும் சொல்லப்போனால், இந்திக்குச் சூட்டப் படுகிற மகுடத்தைக் கழட்டுகிற தருணம் இந்திய அரசியலில் உருவாகுமானால் தி. மு. கழகம் அதை உகந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளத் தவறவே தவறாது!

அதே நேரம் தவறாகக் கணக்குப்போட்டு இந்தியைத் திணிக்கிற வேலையில் இந்திராகாந்தியார் அரசு இயங்குமானால் அந்த முயற்சியை மூர்க்கத்தனமாக எதிர்க்கவும் தி. மு. கழகம் தவறவே தவறாது!

காமராசருக்கு இன்னொன்றையும் கவனப்படுத்த விரும்புகிறோம்!

இந்திய அரசியல் காமராசர் கணித்த திசையில் நகர்ந்து கொண்டிருக்கவில்லை. மிக வேகமாக வேறு திசையில் சென்று கொண்டிருக்கிறது.

இந்தியாவில் இந்தி ஆட்சி மொழியாவதைத் தென்கோடியில் இருக்கிற சின்னஞ்சிறு திராவிடர் இயக்கமும் வேறுசில அறிவாளிகளும்தான் எதிர்க்கிறார்கள்—என்பது ஒரு காலத்தில் இருந்த முதல்கட்டம்

திராவிடர் இயக்கம் மட்டுமல்ல இந்தியை முதன் முதலில் கட்டாயப் பாடமாகக் கொண்டுவந்த ராஜாஜியும் வன்மையாக எதிர்க்கிறார் என்பது இரண்டாவது கட்டம்!

தமிழக மக்களே இந்தியை எதிர்க்கிறார்கள் என்று நிலைமை உருவாகி; அதை உறுதிப்படுத்துவதுபோல் தமிழக சட்டமன்றமே இந்திக்கு எதிராக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நிறைவேற்றியது மூன்றாவது கட்டம்!

இப்போது அடுத்த கட்டமாக ஆந்திர—கேரள—கர்நாடக மாணவர்களும் இந்தியை எதிர்க்கிறார்கள் என்பதை அண்மையில் அவர்கள் நடத்திய போராட்டம் வாயிலாக அறிந்தோம்!

தமிழகத்தில் தி. மு. கழகம் தட்டியெழுப்பியிருக்கிற தாய்மொழிப்பற்று இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் வேகமாகப் பரவிக் கொண்டு வருகிறது!

ஒரு காலத்தில் ராஜஸ்தான் மாநிலத்தில் பேசுகிற மைதிலி மொழி இந்தி மொழியின் ஒரு பிரிவாக கருதினார்கள். அந்த மொழி பேசுவோர் தாங்கள் இந்தி மொழி பேசுவதாகக் கருதினார்கள்.

இப்போது நிலைமை மாறிவிட்டது. தங்களுடைய மொழி தனிமொழி; அதற்குத் தனி இலக்கியம் உண்டு; அது இந்தி மொழியிலிருந்து மாறுபட்டது; எனவே எங்கள் மொழிக்குத் தனி அந்தஸ்து வேண்டும்; அதையும் ஒரு தேசிய மொழியாக அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் சேர்க்கவேண்டும் என்று கேட்கிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

அதற்காக அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் பிக்கானீர் மன்னரான டாக்டர் கர்னிசிங் மன்றத்தில் ஒரு தனிநபர் மசோதாவே கொண்டு வந்தார்! கழகம் அதை முழு மனதோடு ஆதரித்தது!

இப்படி ஒரு சூழ்நிலை காரணமாக இப்போது காங்கிரசுக்குப் பெரும்பான்மையில்லாத ஒரு நாடாளுமன்றம் உருவாகியிருப்பது போல்; இந்தி மொழி பேசாதவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நாடாளுமன்றம் உருவாவது நடக்க முடியாதது அல்ல! ஏனெனில் இந்தியாவில் இந்தி பேசாத மாநிலங்கள் தான் அதிகம்!

அதற்கிடையில் காமராசர் நமக்கு வழிகாட்ட வந்திருக்கிறார்!

அருமை நண்பா! இந்தியை எதிர்க்கிறவர்கள் யாராக இருந்தாலும் அந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் அவர்கள் நமக்கு நண்பர்கள்!

நமக்கு இரவல் தலைமை தருவதற்கு வரும் காமராசரைப் பார்த்துக் கேட்க விரும்புகிறோம்,—

> காமராசரே! தி. மு. கழகத்தின் ஆதரவு உங்களுக்கு வேண்டும் என்றால் இந்தி ஆட்சி மொழியாக நீடிப்பதை எதிர்த்து நீங்களோ, அல்லது உங்கள் சிண்டிகேட்டைச் சேர்ந்தவர்களோ நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வாருங்கள்! இதிலே ஒட்டுமொத்தமாக உங்களை ஆதரிக்கிறோம்!

ஒரே கல்லிலே இரண்டு பழங்கள்! உங்கள் கணக்குப்படி இந்திரா காந்தியார் வீழ்வார்; எங்கள் கணக்குப்படி இந்திப் பேய் வீழும்!

ஒரு காலத்தில் உங்களைக் 'கடவுள்' என்று வர்ணித்தார்கள். நீங்கள் இந்தப் பணியைச் செய்வீர்களேயானால் உண்மையாகவே இந்தி பேசாத மக்கள் உங்களைக் கடவுளாக்கி கோவில் கட்டிக் கும்பிடுவார்கள்!

உண்மையில் காமராசர் இதைச் செய்யாவிட்டால் சேலத்தில் அவர் 'இந்தி வெறித தாடகேசுவரிகளோடு' சேர்ந்துகொண்டு நடத்தியது சிண்டிகேடர்களின் கபட நாடகம்—என்றுதான் மக்கள் கருதுவர்!''

முரசொலி மாறன் அவர்கள் கூறியிருப்பதுபோல் செய்து காட்ட காமராசர் தயாராக இருக்கமாட்டார்! ஏனெனில் இவையல்ல காமராசரது வேலைகள். சிண்டு முடிந்து விட்டுக் கொண்டிருந்தால் மட்டுமே போதும் என்று நினைப்பவர் அவர். சிக்கலறுக்கும் பணி அவருக்கு ஏன்?

இந்தி விவகாரத்தில் தலையிட்டுவிட்டு, வடபுலத்து மொரார்ஜிகளிடம் குட்டுப்பட அவர் பைத்தியக்காரரா என்ன?

எனவேதான் நண்பா, அண்ணா அவர்களது கொள்கையினைத் தனதுபோல் ஆக்கிக் காட்டி, மக்களை ஏமாற்ற நினைக்கிறார். மக்களது அறிவுடைமை பற்றி இன்னமும் அவர் தப்புக் கணக்குப் போடுகிறாரே, அதுதான் பரிதாபகரமாக இருக்கிறது. வார்த்தை அளவில் ஒரு நன்றிகூடக் காட்டாமல் ''அப்படியே''தானே தந்தை என்கிறாரே, பரிதாபத்துக்குரியவர்! அதனால் தான் அவர் காமராசரோ!

அன்புள்ள,

[illegible]

---

சட்டத்தைப் பணக்காரன் செய்கிறான். சட்டம் ஏழைகளை ஆளுகிறது.

—கோல்ட்ஸ்மித்.

# திருட்டுக் கதை

—அரிமதி-தென்னகன்—

அவன் கண்மேல் அவனுக்கே நம்பிக்கை இல்லை, 'அரசி' என்ற அந்த பிரபல வார ஏட்டை மறுபடியும் திருப்பினான். சந்தேகமே இல்லை; கதையின் தலைப்பு, 'இதயம் இழந்தவள்' தான், எழுதியவர் 'தாமரைவிழியன்'தான்.

மறுபடியும் புரட்டினான்; தாமரைவிழியனேதான்.

"சீச்சீ! இவ்வளவு கீழ்த்தரமான என் நண்பன்; நண்பனா...? உயிர் நண்பன்? உடன்பிறப்பைவிட மேலானவன்?"

தேவனின்நெஞ்சம் நெருப்பானது.

"தாமரை, உன் ஒவ்வொரு அங்குல முன்னேற்றத்திலும் நான் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறேன் தெரியுமா? தமிழகத்திலேயே என் நண்பன்தான் மாபெரும் எழுத்தாளன் என்று நான் குதித்துக் கூத்தாடும்நாள்வரத்தான் போகின்றது"

"தேவா, நீ மட்டுமென்ன, நல்ல கொள்கை எழுத்தாளன்தானே"

"இருந்தாலும் ஒரு சாதாரண எழுத்தாளன். பிரபலமாகாத ஏடுகளில் எழுதுபவன்; என்னைப்போலா நீ; அப்பா! எவ்வளவோ வளர்ந்து விட்டாய் நீ"

"தேவா உனக்குத் தோன்றும் 'கரு' இருக்கிறதே, அது எந்த மாபெரும் எழுத்தாளனுக்கும் தோன்றுவது கிடையாது; உன் நடையே தனி; என்ன செய்வது? இப்போது நீ குடத்து விளக்குதான்; நாளை...குன்றின்மேல் ஏற்றிய தீபமாக வரத்தான் போகிறது"

என்றோ நடந்த இந்த உரையாடல் இன்று தேவனின் உள்ளத்தில் திரைப்படமாகியது.

இப்படியும் இருக்கலாமா?

மறுபடியும் தேவனுக்கு ஒரு சந்தேகம்.

'இதயம் இழந்தவள்' தாமரையின் சொந்தக் கற்பனையாக இருக்குமோ?

பழைய கடிதங்களையெல்லாம் மறுபடியும் தேடிப் பார்த்தான். ஐயோ! அந்தக் கடிதம் கிடைக்காமல் இருக்கக்கூடாதா?

"அன்புள்ள நண்பா, 'வஞ்சி' வார ஏட்டில் நீ எழுதிய 'மனித தெய்வம்' கதையைப் படித்தேன்; சூடான கருத்து; சுவையான நடை; அன்பான பாராட்டுகள்."

அந்தச் சந்தேகமும் தீர்ந்து விட்டது.

மனித தெய்வந்தான் இதயம் இழந்தவளாக 'அரசி'யில் வெளி வந்திருக்கிறது.

அப்படியென்றால்...?

இதயம் இழந்தவள் திருட்டுக் கதைதான். யாருடைய 'கரு'விற்கு யார் அப்பனாவது? திருட்டிலும் ஒரு நீதி வேண்டாமா?

நண்பனுடையதை நண்பனா திருடுவது?

ஐயோ! ஐயோ!

எப்போதும்போல் இந்த ஏடு கண்ணிலே — படாமல் இருக்கக் கூடாதா? பட்டுதான் தொலைத்தது; வாங்காமலாவது இருக்கக் கூடாதா?

அது எப்படி முடியும்...?

விளம்பரத் தாளில் 'தாமரை விழியன்' என்ற பெயரைப் பார்த்த பிறகு வாங்காமல் இருக்க முடியுமா?

நண்பனின் கதையைப் படித்து மகிழ வேண்டாமா? அந்த மகிழ்ச்சியை நண்பன் தாமரைக்கு அறிவிக்க வேண்டாமா? இந்த இடங்களில் இந்தச் சிறப்பு, இந்த இடம் இப்படி இருக்கவேண்டும் என்றெல்லாம் மடல் எழுத வேண்டாமா?

தேனெடுக்கப்போய் தேன் கொட்டப்பட்ட நிலை தேவனுக்கு வந்து விட்டது.

"கடுமையாகக் கண்டித்து மடல் எழுதிவிட வேண்டியதுதான். சிச்சீ, நீயும் ஒரு எழுத்தாளனா? நண்பனா?"

தேவனின் கண்கள் எதிரே இருந்த தெய்வத்திருவுரு அண்ணாவின் திருவுருவத்தைக் கண்டன.

"தம்பி, என்னை வழிகாட்டியாகக் கொண்டவன் என்பதை மறந்து விட்டாயா?"

'இல்லை அண்ணா இல்லை; உங்களை எதிரியாகக் கொண்டவரையும், 'நீ எங்கிருந்தாலும் வாழ்க!' என்று நீ வாழ்த்தினாயே அண்ணா; அந்த அன்புநெறியை நீ காட்டிய அறவழியை மறக்க மாட்டேன் அண்ணா'

நல்லவேளை...தேவனை, அண்ணா தடுத்தாட்கொண்டார்.

"நண்பா தாமரை, நீ எங்கிருந்தாலும் வாழ்க! எப்படியும் வளர்க"

தேவனின் நெஞ்சம் தாமரையை வாழ்த்தியது.

அண்ணாவின் புன்னகை தேவனின் கண்களைப் பனிக்கச் செய்தது.

"அண்ணா அண்ணா!!"

"என்னங்க இது, அண்ணா நாமாவளியா!!"

மனைவியின் குரல்கேட்டு தேவன் தன்னுடையநிலையை உணர்ந்தான்.

'ஏங்க ஒரு மதிரியா இருக்கீங்க'

"ஒன்றுமில்லை மணி, நான் எழுதிய 'மனித தெய்வம்' என்ற கதையை, தாமரை விழியன் வேறொரு ஏட்டில் எழுதியுள்ளார்."

"எனக்கும் தெரியும்; நானும் அந்தக் கதையை 'அரசி' ஏட்டில் படித்துப் பார்த்தேன், அண்ணனா இப்படிச் செய்தார்ன்னு நம்பவே முடியவில்லை. காலந் தாங்க இதுக்குப் பதில் சொல்லவேணும், உம்... அந்தக் காலம் வரத்தான் போவுது, பாருங்களேன்"

தன் மனைவி கண்மணியின் ஆறுதல் அப்போதைக்குத் தேவனுக்கு ஆறுதலாகவும், இதமாகவும் இருந்தது.

காலதேவன் இரண்டு நாள் என்னும் பிஞ்சுக்களைத் தன் வாயில் போட்டுக்கொண்டான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை.

'வாங்கண்ணா வாங்க; நீங்க வருவிங்கன்னு எனக்கு நிச்சயமா தெரியும்.'

'வா தாமரை'

தன் மனைவியைப் போலவே தன் நண்பனை வரவேற்க ஏனோ தேவனால் முடியவில்லை.

நாற்காலியில்உட்கார்ந்த தாமரை ஏதோ இரண்டொரு புத்தகங்களை எடுத்துப் புரட்டினான்.

தாமரையின் கண்கள் அங்கிருந்த 'அரசி' ஏட்டைக் கண்டன.

'கதையைப் படிச்சியா தேவா?'

'எந்தக் கதையை?'

'அதான், அரசி ஏட்டில் வந்திருக்கும் என் கதையை.'

'உன் கதையா?'

'உன்' என்பதற்குத் தேவன் கொடுத்த அழுத்தம் தாமரையைத் திடுக்கிட வைத்தது.

'இதயம் இழந்தவளைப் படிக்கலையா?'

'உம்...படித்தேன்'

'இந்தாங்கண்ணு, காபி சாப்பிடுங்க'

நண்பனின் மனைவி கொடுத்த காபி தாமரைக்குச் சுவைக்கவில்லை.

நெஞ்சில் கசப்பிருக்கும்போது, நாக்கிற்கு எங்கே சுவை தெரியும்?

'ஏம்மா மணி, என்னம்மா? தேவன், பிள்ளை சாவு கொடுத்தவனுட்டமா......' தாமரை முடிக்கவில்லை.

"உண்மைதான் தாமரை, நான் பிள்ளையை இழந்தவன்தான். சாதாரண பிள்ளை இல்லே தாமரை 'மனித தெய்வம்...' 'இதயம் இழந்தவள்' அதைக் கொன்னுட்டா..."

தேவனின் கண்கள் நெருப்புத் துண்டங்களாயின.

தேவனின் சிலேடை தாமரை விழியனுக்கு நன்ருகப்புரிந்தது.

சுற்றிவளைக்காமல், நேரடியாகவே செய்திக்கு வரவேண்டிய நெருக்கடி தனக்கு வந்து விட்டதைத் தாமரை உணர்ந்தான்.

'தேவா, நான் சொல்லி முடிக்கிற வரைக்கும் குறுக்கே தடுக்காதே; மணி, நீயும் கவனமா கேளும்மா...!

தேவன் விருடிக்கொருமுறை அண்ணாவின் திருவுருவைப்பார்த்துக் கொண்டான்.

அணையுடைத்த வெள்ளமாகத் தன் கோபம் ஆகிவிடக் கூடாதே என்ற அச்சம் அவனுக்கு.

தாமரை தொடர்ந்தான்...

"நான் எழுதிய இதயம்இழந்தவள் முழுக்க முழுக்க மனித தெய்வந்தான். எதையும் மாற்றவில்லை. ஆணைப்பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றியதைத் தவிர, முழுக்கதையும், கதையின் கருவும் தேவனுடையதுதான்......"

தெரிஞ்சுதான் இத்தனையும் செய்தியா? தேவன் குறுக்கிட்டான்.

"ஆமாம்; உன்னைப்பற்றி உனக்கே தாழ்வு உணர்ச்சி; 'அவங்க எல்லாம் பெரிய எழுத்தாளருங்க, என்று அடிக்கடிப் பிறரைப் போற்றும் உனக்கு, உன்னுடைய ஆற்றல், உன்னுடைய திறமை, உன்னுடைய கற்பனை வளம் எதுவுமே தெரியவில்லை.

இந்தத் தாழ்வு மனப்பான்மை உன்னை முன்னேற வைக்கவில்லை; ஒருவகையாக உன்னிடம் குடிகொண்ட அடிமைப் புத்தி உன் எழுத்துலகப் பயணத்திற்குத் தடையாக இருந்தது. 'அது தவறு! உன்னுடைய கற்பனை வளம் சாதாரணமானதல்ல; பெரிய பெரிய எழுத்தாளருங்களுக்குக் கூட இந்த கற்பனை வளம் கிடையாது; அதனால் நாமும் துணிஞ்சி பெரிய பெரிய பத்திரிகைகளுக்கு எழுதலாங்கற எண்ணம் வரவேணும். அதைத் தட்டி எழுப்பவேணும்'ன்னு நினைச்சேன். உனக்கு நான்தான் பெரிய எழுத்தாளனாயிற்றே; நானே உன் கதையைப் பெரிய பத்திரிக்கைக்கு எழுதினேன். அது சிறப்பாக வெளி வந்தது. அதனால் என்ன தெரியுது?

நீயும் பெரிய எழுத்தாளன்தான். இப்போதாவது உனக்குப் புரியுதா? இதோ பார் இவ்வளவும் எனக்கு வந்த பாராட்டுக் கடிதங்கள்.

யாரையுடைய எழுத்துக்கு? யாருடைய கதைக்கு? உன்னுடைய எழுத்துக்கு; கதைக்கு; நீ பெற்ற பிள்ளைக்கு;

இப்போது சொல் நான் துரோகியா?"

'இல்லை நண்பா. இல்லை......என் நண்பன் துரோகியாக இருக்க முடியாது.'

இரண்டு நெஞ்சங்களின் அணைப்பைக் கண்டு மற்ருெரு நெஞ்சம் மகிழ்ந்தது.

'நல்ல வேளை கடிதம் எழுதி வரவழைத்தோமே' என்று நினைத்த தேவனின் மனைவி கண்மணியின் உள்ளம் நட்பைக் காப்பாற்றிவிட்டோம் என்று பெருமிதங் கொண்டது.

---

# அண்ணா  போல!

—வலங்கொண்டான்

குள்ளமான உருவந்தான் குறளைப் போல!
    குவலயமே மகிழுமுள்ளம் நிலவைப் போல!
வெள்ளமான பேச்செல்லாம் வெல்லம் போல!
    வடிக்கின்ற கருத்தெல்லாம் கன்னல் போல!
எள்ளவரும் பகைமதிக்கும் காந்தி போல!
    எடுத்தாண்டார் நாடகத்தை ஷாவைப் போல!
உள்ளபடி உழைத்திருந்தார் லிங்கன் போல!
    உலகத்தில் காண்பதெங்கே அண்ணா போல?

அரசியலில் சத்தியத்தை காந்தி சொன்னர்!
    அறிவுடைய திட்டங்கள் நேரு தந்தார்!
உரமாகும் ஒற்றுமையைப் பட்டேல் ஈந்தார்!
    உரிமையென்ற பெருமைதனை திலகர் தந்தார்!
வரம்பற்ற வீரத்தை சுபாசும் தந்தார்!
    வரலாற்றில் கண்டிடாத குடும்பப் பாசம்
தரவந்த பெருமேதை அண்ணா போல
    தரணியிலே கண்டதில்லை! தூயோன் எங்கே?

எத்தலைப்பு தந்தாலும் திறமாய்ப் பேசும்
    எழிலறிவும் பொலிவுடைய நல்ல மேதை!
முத்தமிழில் கவிமயங்கும் எதுகை மோனை
    வரம்பின்றி வந்துசேர்க்கும் நயத்தில் தானே!
புத்தனென காந்தியென அறத்தின் மாட்சி
    பூத்திடவே ஆட்சிசெய்த அறிவுக் காடு!
எத்திக்கும் கிடைப்பதில்லை அண்ணா போல
    எல்லோரும் போற்றுகின்ற அறிஞரேறு!

உ-ம் பக்கத் தொடர்ச்சி

ஆயுதங்கள் ஒரு பெரிய சதிப்பட்டாளத்தையே காட்டிக்கொடுத்தது

இயேசு கிறிஸ்துவும் முகம்மது நபியும் பிறப்பதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே புண்ணிய கங்கையும் யமுனையும் பாய்ந்து புனிதப்படுத்திய பூமியிலா மதச்சார்பற்ற அரசு?

'இங்கே இந்து மதம்தான் அரச மதம்' என்று இடைக்கால சர்க்காரின் அதிகாரபூர்வமான கூட்டங்களில் பேசி, சிறுபான்மைக்கு அறைகூவல் விட்டதாக நடவடிக்கைக் குறிப்பே இருக்கிறது!

வெள்ளையன் போனான் — அவன் இந்தியாவையும் பாகிஸ்தானத்தையும் பிரித்துக்கொடுத்தான் என்ற உடன்பாட்டில் பொறித்தமுத்திரை மைகூட உலரவில்லை. அதற்குள் இந்தியா-பாகிஸ்தான் பூசல்கள் தொடங்கிவிட்டன. காஷ்மீரத்து இந்து மன்னர் மக்களைக் கலக்காமலே காஷ்மீரத்தை இந்தியாவிடம் அடகு வைத்துவிட்டார் என்று ஷேக் அப்துல்லா அப்போதே குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டிருந்தார்

விடுதலை பெற்ற இரண்டே ஆண்டுக்குள் காங்கிரசுக்காரர்கள் தியாகத்தின் பேரால் செய்த கொடுமைகளை மக்கள் பரவலாகப் பேச ஆரம்பித்திருந்தார்கள்.

பல பொதுக்காரியங்களுக்காகப் பொதுமக்களிடமிருந்து திரட்டிய பொதுப்பணத்தைக் காங்கிரசுக்காரர்கள் கையாடிய கொடுமையைக் கண்டித்து அரிசன் இதழில் இராசகுமாரி அமிர்த கௌரி எழுத வேண்டிய நிலையில் அந்நாள் காங்கிரசு இருந்தது!

நைசாமின் நிசாமும். ரசாக்கர்களும் இந்தியாவுக்குத் தலைவலியாக இருந்த நிலையைத் துப்பாக்கி முனையில் மாற்றி இணங்கவைக்க வேண்டியிருந்தது.

இந்தியாவின் 'சமஸ்தானாதிபதிகள் எல்லாம் ஒன்று திரண்டு விடுதலை பெற்றுக் குழம்பிக்கிடந்த இந்தியாவைச் சூறையாடித் தீர்த்துக் கட்ட முயற்சிகள் மேற்கொண்டிருந்தார்கள். அதற்குச் சில பெரியவர்கள் திட்டங்கள் தீட்டிக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள்.

இன்று 'பவித்திர'மானதென்று 'பயபக்தி'யோடே வருணிக்கப்படுகிற இந்திய அரசியல் சட்டம் அன்று உருவாகவில்லை.

அம்பேத்காரும் அல்லாடி கிருஷ்ணசாமியும் பிறரும் அறைகளிலே அமர்ந்து அரசியல் சட்ட விதி முறைகளை விவரித்துக்கொண்டிருந்தார்களேயன்றி, கந்தனுக்கும் முனியனுக்கும் அவைபற்றி ஒன்றுமே தெரியாத நேரம் அது!

வெள்ளையர் போன பின்னும் அதே பாணி ஆட்சியை அனுபவித்துச் சலித்த மக்கள், அடுத்து இங்கே அமைய இருப்பது முடியரசா, குடியரசா, தடியரசா என்று புரியாமல் குழம்பிக் கொண்டிருந்தார்கள்

அப்போது தேர்தல் இல்லாமல் நியமிக்கப்பட்ட சில காங்கிரசுக்காரர்கள் நாட்டை ஆண்டுகொண்டு இருந்தார்கள். அப்போது வயது வந்தவருக்கு வாக்குரிமைவரவில்லை!

காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து உலகமே கண்ணீரில் மூழ்கி. உலக நாடுகளில் எல்லாம் இதழ்கள் செய்தி வெளியிட்டன. உலக நாடுகளின் அரசாங்க அலுவலகங்களில் எல்லாம் அரைக்கம்பத்தில் கொடிகள் பறக்கவிடப்பட்டன. ஆனால்,

இரும்புத் திரை—சோவியத் நாட்டில் மட்டும் எந்த நாளிதழும் இதைச் செய்தியாகக்கூட வெளியிடவில்லை'

என்றும் இந்தியர் அனைவரும் ஒருமுகமாய்க் குமுறிக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையில் அந்தச் சோவியத் நாட்டுக்குப் 'புதிய இந்தியாவின் சார்பில் ஒரு தூதரை அதுவும் பண்டித நேருவின் தங்கை விஜயலட்சுமியையா அனுப்ப வேண்டும்?' என்று திண்ணையிலே அரசியல் சூடாக விமர்சிக்கப்பட்டது!

இப்படி நாடே குட்டை குழம்பிக் கொண்டிருந்த நிலையிலே தான். வெள்ளையர் ஆட்சியில் பெட்டிப் பாம்பாய் அடங்கிக் கிடந்த கம்யூனிஸ்டுகள் மெல்லத் தலைநீட்டி நாக்கைத் துழவ ஆரம்பித்தனர்:

காங்கிரசின் தீவிரவாதக் கும்பலில் இருந்த பல முக்கியமானவர்கள். காங்கிரசுக்குப் பின்னாலே கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான் மக்களைக் கரை சேர்க்கவல்லது என்று பீற்றிக் கொண்டிருந்தார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் பழம் பெரும் நீதிக் கட்சிக்காரரான தோழர் ப. ஜீவானந்தம் போன்றோர் கூடக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து மூச்சுப் பிடித்துப் பணி செய்யத் தொடங்கினா'கள்,

உலகத்திலேயே சோவியத் ரஷ்யா ஒன்றுதான் சொர்க்க பூமி என்றும், அதை அடைவதற்குக் கம்யூனிசம் ஒன்றுதான் வழியென்றும் அங்கே சென்று வந்தவர்களும், இவ்விடத்துக் கற்பனைப் பேச்சாளர்களும் கட்டுப்பாடாகப் புளுகிக் கொண்டிருந்தார்கள்.

சிந்தனையின் சிறகை விட்டு. பட்டை கட்டிய வண்டிக் குதிரையைப் போல பக்கம் பார்க்காமல் குருட்டாம் போக்கில் போகச் சொல்கிற ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பாணியிலேயே இந்திய கம்யூனிஸ்டு கட்சி நடைபோட ஆரம்பித்தது.

தெலுங்கானாவிலும் கேரளத்திலும் பயங்கர இயக்கங்கள் கம்யூனிஸ்டுகளின் நல்லாதரவுடன் துளிர்த்துத் தழைத்துக் கொண்டிருந்தன. அதே நேரத்தில் அக்கம் பக்கத்து நாடுகள் வல்லரசுகளின் பிடிகளிலிருந்து ஒவ்வொன்றும் விலகி விடுதலை பெறத் தொடங்கின. இதுதான் தக்க நேரம் என்று பல்லை விளக்கிக் கொண்டு அங்கெல்லாம் சென்று முகாமிடத் தொடங்கினார்கள் கம்யூனிஸ்டுகள்!

திராவிடர் கழகத்தின் கோட்டையாக இருந்த தஞ்சைத் தரணியின் வேளாண்மைப் பண்ணைகளிலே கம்யூனிசத்தைப் பயிர் செய்து வளர்த்துப் பின்னாளில் தமிழ் நாடு முழுவதையும் அறுவடைக்கு வாய்ப்பாக்கிக் கொள்ளலாம் என்று தமிழகத்துக் கம்யூனிஸ்டுகள் மனமார நம்பிக் கொண்டிருந்தார்கள்!

நாடு குழம்பி, கம்யூனிஸ்டுகள் வாய் பிளந்து காத்துக் கொண்டிருந்த இந்த நேரத்திலேதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் வருமுன் காக்கும் எண்ணத்தோடே இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவங்கினார்கள். அதன் விளைவுதான் இரண்டு அண்டை மாநிலங்களில் கம்யூனிஸ்ட் அழிவுச் செயல்கள் முடைநாற்ற மடிக்கத் தமிழகம் மட்டும் அமைதியாய் இருக்கிறது.

அண்ணா அவர்கள் தி.மு.க.-வைத் தோற்றுவித்த நாட்களில் பக்கத்திலிருந்த வெளிநாடுகளின் நிலை என்ன தெரியுமா?

நம்மோடேயே விடுதலை பெற்ற பாகிஸ்தானில் அரசு அமையுமா இல்லையா என்ற நிலை. பக்கத்திலே பர்மாவில், மக்களின் மனங்கவர்ந்த தலைவன் 'அவுங்சான்', வெறித்தனமாக சுட்டுக் கொல்லப்பட்டது பொதுவாழ்க்கையில் ஈடுபடுவோ

ருக்கே ஓர் அதிர்ச்சியாயிற்று. பர்மாவின் கூட்டுப் பகுதிகளில் கம்யூனிஸ்டுகள் ஆடிய வெறியாட்டத்தை உலகம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. அன்றைய மலாயாவில் கம்யூனிஸ்டுகள் கையாண்ட கொரில்லாப் போர் முறை நாட்டைச் சீர்குலைய வைத்தது. சீவித் தள்ளப்பட்ட மனிதத் தலைகளை எண்ணிக் கணக்குப் பார்க்கவும் தோட்டந் தோட்டமாய் கம்யூனிஸ்டுகளைத் தேடி அழிப்பதற்கு வரிப்பணத்தைக் கொட்டித் தொலைக்கவுமே சரியாக இருந்ததே தவிர, மலேயா அரசு தன் மக்களுக்கென்று ஒரு நல்ல திட்டத்தைக் கூடச் செயல்படுத்த முடியவில்லை.

இந்தோனேசியாவிலும் கம்யூனிஸ்டுகளின் ஊடுருவல் மெல்லப் புகைச்சலை எழுப்பிக் கொண்டிருந்தது. இந்தோனேசியக் கம்யூனிஸ்டுகளுக்குப் புதுப் புதுப் போர் முறைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

கன்னியாகுமரியில் இடியிடித்துக் கதிர்காமத்தில் மழை பொழியும் அளவுக்குப் பக்கத்தில் இருக்கும் சின்ன நாடான ஈழம் பிரிட்டிஷ் அரசின் நேர் மேற்பார்வையில் ஆட்சி செய்யப்பட்டது. தமிழகத்தின் அன்றாட நடவடிக்கைகளின் அதிர்ச்சி ஈழத்தில் மெல்ல எதிரொலிப்பது வழக்கம். வங்காளத்தையும், மராட்டியத்தையும் கூர்ந்து கவனிப்பதை விடத் தமிழகத்தையே ஈழம் கவனிக்கிறது. இனத்தால், பண்பால், மொழியால். நடை உடை, வழக்க ஒழுக்கங்களால் ஒன்றுபட்டுக் கிடக்கும் தன்மைதான் இந்தப் பிரச்சினைக்குக் காரணம் என்பதைப் புரிந்துகொள்ள மறுப்பவர்கள் அங்கலாய்க்கட்டும்,

ஆனால் தமிழகத்தில் கம்யூனிஸ்டுகள் ஏற்படுத்திய சலசலப்பின் சத்தம் மெல்ல ஈழத்திலும் கேட்கத் தொடங்கியது என்பதே உண்மை.

பயங்கரமான ராட்சசச் சிலந்தியின் நஞ்சு கக்குங் கொடுங்கரங்களைப் போல கம்யூனிஸ்டுகள் தமிழகத்தையும், அண்டை நாடுகளையும் கவ்வியழுத்தும் கோரத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமக்கே உரிய தொலைநோக்கோடே கண்டார். அதன் விளைவுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்தக் காலத்தையும் சூழ்நிலைகளையும் மனத்தில் வாங்கிக் கொண்டு அண்ணா இல்லாத—அண்ணாவின் திராவிட முன்னேற்றக் கழகம் உருவாகாத — தமிழகத்தைக் கண்முன் கொண்டு வந்து பாருங்கள்.

தூரக்கிழக்கில் அடிபதிக்க முயலும் ஏதோ ஒரு வல்லரசுக்கு எடுபிடியாக—ஏவல் தளமாகத் தமிழகம் நிச்சயமாக அமைந்துவிட்டிருக்கும். சொந்த மண்ணுக்குரிய வீர இளைஞர்களைப் பலி கொடுத்த கொரியா போல், வியட்நாம் போல் இதற்குள் தமிழகம் வெறிச்சோடிப் போயிருக்கும். அண்டை மாநிலங்களில் பலாத்காரவாதிகளுக்கு இடமளித்துப் பட்ட கஷ்டத்தைப் பார்த்த பிறகாவது தமிழகத்தில் அது நேராமல் காத்த பேரறிஞர் அண்ணாவைப் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழகத்தில் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம் ஆழப் பதியவொட்டாமல் அறிஞர் அண்ணா அவர்கள் திட்டமிட்டுக் காலமறிந்து தொடுத்த கணைதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

கொடுங்கோல் மன்னனின் கொடுரப்பிடியிலும், மதவாதிகளின் மயக்கு மொழிகளிலும் சிக்கித் திணறிய இரஷ்ய மக்களைத் திரட்டி அணி சேர்த்துப் புதிய பூமி காணத் திட்டமிட்டபட்ட லெனினுக்கு இருக்கின்ற பெருமையை—மரியாதையை விடக் கொஞ்சமும் மாற்றுக் குறையாத பெருமைக்கும் மரியாதைக்கும் உரியவர் அண்ணா!

பேரறிஞர் அண்ணா அவர்கள் கம்யூனிசத் தத்துவங்களைக் குறை சொன்னதில்லை; ஆனால் தத்துவங்களை அடைய தவறான பாதையில் கம்யூனிஸ்டுகள் செல்வதைத்தான் அவர் கண்டித்தார்.

மாறுபட்ட வெட்ப தட்ப நிலைகளும் சமுதாய அமைப்புங்கொண்ட சோவியத் மண்ணில் வெற்றி பெற்றுவிட்டது என்று சொல்வதாலேயே தமிழகத்திலும் அதே வழியில் கம்யூனிசம் வெற்றி பெறும் என்று தப்புக் கணக்குப் போடுவதைச் சுட்டிக் காட்டினார்.

நாட்டு நடப்பைக்கூர்ந்து காணாமல், வரலாற்றைப் புரிந்து கொள்ளாமல், சமுதாய அமைப்பை எண்ணிப் பாக்காமல் ஏட்டிலே படித்ததை மட்டும் வைத்துக்கொண்டு பாட்டாளி வர்க்கம்—முதலாளி வர்க்கம் என்று இரண்டு மட்டுமே இருப்பதாய்க் கண்ணை மூடிக்கொண்டு நம்பினர்கள் கம்யூனிஸ்டுகள். அநதத் தவறான கடைகாலின் மீது கட்டப்பட்டதே இந்தியாவின் கம்யூனிஸ்ட் இயக்கம்! அதைத்தான் அண்ணா கண்டித்தார்கள். எங்கோ இருந்து, யாரோ இயக்கிட, சூட்சமத்தில் இயங்கும் நிலையில் இல்லாமல் இந்த மண்ணின் முன்னேற்றத்திற்காக இந்த மண்ணின் மொழி-கலை-பண்பாட்டின் அடிப்படையில் நிலைக்கத் தக்க கொள்கை வகுத்துத் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டார் அண்ணா!

நாற்பதேவயதில், பதினைந்தாண்டு அரசியல் வாழ்க்கையும் பெரியார் தந்த அரசியல் பயிற்சியும், நம்பிக்கைத் தோழர்களின் துணையும் கொண்டு கழகத்தைத் துவக்கினர் என்றால். கொடுமைக்காரர்களின் கைகளிலிருந்து தமிழகத்தை விடுவிக்க வேண்டும் என்ற ஒரே துடிப்பில் அந்தத் துணிச்சலை அவருக்கு தந்தது.

இன்றைய அண்டை நாடுகளின் அவல நிலைகளைக் காணுகிறபோது அண்ணாவின் இந்தத்தொலைநோக்கு புரியாமற் போகாது. இப்போது மட்டுமன்று. இன்னும் பன்னூறு ஆண்டுகளுக்குப் பின்னும் பேரறிஞர் அண்ணா அவர்கள் திசை திருப்பி விட்ட இந்த அறவழியில்தான் தமிழகம் நடைபோட இருக்கிறது. அந்தப் பன்னூறு ஆண்டுகளிலும் காலத்திற்கேற்ப முறைகளிலே ஆங்காங்கே கொஞ்சம் மெருகூட்டப் படலாமே அன்றி, செல்லுகின்ற பாதையைச் செப்பனிட்டுக் கொள்ளலாமே யன்றி, பாதை என்னவோ அறிஞர் அண்ணா காட்டிய பாதைதான்; அதில் நெடுங்காலத்துக்கு மாறுதலே இல்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள், காவா நாவிற் பண்டித நேருவோடு தம்மை ஒப்பிட்ட தோழர்களுக்கு அடக்கமாக,

'அவர் கட்டி முடிக்கப்பட்ட
கோபுரம்;
நான் கொட்டி வைக்கப்பட்ட
செங்கல்!'

என்றார்கள். ஆனால் இன்றோ வங்கக் கடலலைகள் அளக்க வரும் மணற்பரப்பில். பல்கலைகள் வாழ்விக்கும் பாசறையின் நேரெதிரில். நிலமகளின் பொன்மடியில் ஆழ்ந்துறங்கும் திருத்தலத்தில் கட்டி முடிக்கப்பட்ட கவின்மிக்க கூர்முனைக் கோபுரமாய் விண்ணளந்து நிற்கிறார்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள்!

வாழ்க அண்ணாவின் திருப்பெயர்!
செழிக்க அவர் காட்டியசெந்நெறி!

நன்றி: மன்றம்

★

காஞ்சி 22—2—70 REGD. No. M. 8326

கோ-ஆப்டெக்ஸ்

**கைத்தறி ஆடைகள்**

தரமானவை
நெடுநாள்
உழைப்பவை
சிக்கனமானவை

பலவிதமான டிசைன்களில்
கிடைப்பதுடன் வண்ணம் மாருமலும்
உழைக்கும் நைஸ் ரக
வேஷ்டிகளும் ரெடிமேட் ஆடைகளும்
உள்ளன.

இன்றே எங்கள் ஷோ ரூம்களுக்கு
விஜயம் செய்யுங்கள்!

**தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம்
லிமிடெட்,**
எழும்பூர் சென்னை.

போன்: 82121, 82122

தலைவர்:
எஸ். கே. சம்பந்தன்,
பி. ஏ., எம். பி.,

ஆசிரியர் வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்கள் · காஞ்சிபுரம்